بسم الله الرحمن الرحيم    نحمده ونصلي على رسوله الكريم    وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

இதழ் 28

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

07 துல்கஃதா 1440 ஹிஜ்ரி கமரி 11 வஃபா 1398 தப்லீக் ஹிஜ்ரி ஷம்ஸி
11 ஜூலை 2019


### அல்லாஹ்வின் கட்டளை

وَاعْتَصِمُوْا بِحَبْلِ اللّٰهِ جَمِيْعًا وَّلَا تَفَرَّقُوْا وَاذْكُرُوْا نِعْمَتَ اللّٰهِ عَلَيْكُمْ اِذْ كُنْتُمْ اَعْدَآءً فَاَلَّفَ بَيْنَ قُلُوْبِكُمْ فَاَصْبَحْتُمْ بِنِعْمَتِهٖٓ اِخْوَانًا

நீங்கள் யாவரும் ஒன்றுபட்டு அல்லாஹ்வின் கயிற்றை உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். நீங்கள் பிரிந்து போய் விடாதீர்கள். உங்கள் மீது (செய்து)ள்ள அல்லாஹ்வின் அருளை நினைவில் கொள்ளுங்கள். (3:103)

### அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## எதிரிகள் பேனாவின் மூலம் நம்மீது தாக்குதல் தொடுக்க விரும்புகின்றனர், மேலும் தொடுக்கின்றனர் நாம் அவர்களை கம்புடன் எதிர்கொள்ள தயாராகுவது எவ்வளவு முட்டாள்தனமாகும்

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

### ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது ( அலை) அவர்களின் வருகையின் நோக்கம்

நான் புதையுண்டிருந்த அந்த கருவூலத்தை உலகிற்கு காண்பிப்பதற்காகவும் மேலும் இந்த அழகான ஆபரணத்தின் மீது வீசப்பட்டிருந்த அசுத்தமான ஆட்சேபணைகளின் சேற்றை அதிலிருந்து சுத்தம் செய்வதற்கும் இறைவன் என்னை அனுப்பியுள்ளான். திருக்குர்ஆனின் கண்ணியத்தின் மீது ஒவ்வொரு தீய எதிரிகளால் செய்யப்பட்டுள்ள ஆட்சேபணைகளின் கறைகளிலிருந்து மேலானதாகவும், பரிசுத்தமானதாகவும் ஆக்குவதற்கு இறைவனின் தன்மானம் இப்போது அதிக ஆர்வத்தில் இருக்கிறது.

ஆக சுருக்கம் இவ்வாறான நிலையில் எதிரிகள் பேனாவின் மூலம் நம்மீது தாக்குதல் தொடுக்க விரும்புகிறார்கள். மேலும் தொடுக்கின்றனர். நாம் அவர்களை கம்புடன் எதிர் கொள்ள தயாராகுவது எவ்வளவு முட்டாள்தனமாகும். நான் உங்களுக்கு தெளிவாக கூறிவிடுகிறேன். இவ்வாறான நிலையில் எவரேனும் இஸ்லாத்தின் பெயரை சொல்லிக்கொண்டு போரின் வழிமுறையில் பதில் தருவாராயின் அவர் இஸ்லாத்திற்கு அவபெயர் ஏற்படுத்துபவர் ஆவார். தேவை அற்ற தருனத்தில் மேலும் அவசியம் இன்றி வாளால் போர் செய்வது ஒருபோதும் இஸ்லாத்தின் நோக்கமாக இருந்தது இல்லை. இப்போது போரின் நோக்கம் நான் கூறியது போன்று வித்தையின் வடிவத்தை பெற்று மார்க்கமாக இருக்கவில்லை. மாறாக, உலகக்குரிக்கோள் அதன் நோக்கமாக ஆகிவிட்டது. எனவே ஆட்சேபணை செய்பவருக்கு பதில் தராது வாளை காண்பிப்பது எவ்வளவு பெரிய அநீதியாகும். இப்போதைய காலத்தின் போரின் வடிவம் மாறிவிட்டது.

எனவே அனைத்திற்கும் முதலில் தமது உள்ளம் மற்றம் மூளையை பயன் படுத்துவதும் மேலும் ஆன்மாவை சுத்தப்படுத்துவதும் அவசியமாகும். தூயவழியில் மற்றும் இறையச்சத்துடன் இறைவனிடம் உதவியையும் வெற்றியையும் வேண்டவேண்டும். முஸ்லிம்கள் வெறும் கூற்று மற்றும் சொல் மற்றும் பேச்சால் போட்டியில் தேர்ச்சியும் வேற்றியையும் விரும்பினால் அது சாத்தியமில்லை என்பது இறைவனின் உறுதியான சட்டம் மற்றும் வழக்கமான நடைமுறையும் ஆகும். இறைவன் தேவையற்ற பெருமிதத்தையும் சொற்களையும் விரும்புவதில்லை அவன் உண்மையான இறையச்சத்தை விரும்புகிறான் மேலும் உண்மையான தூய்மையை விரும்புகிறான். இவ்வாறு அவன் கூறுகிறான் :- اِنَّ اللّٰهَ مَعَ الَّذِيْنَ اتَّقَوْا وَّ الَّذِيْنَ هُمْ مُّحْسِنُوْنَ (16:129)

### அறிவையும் பயன் படுத்தவேண்டும்

நாம் அறிவையும் பயன் படுத்த வேண்டும் ஏனெனில் மனிதன் அறிவின் காரணமாகவே ஞானம் உள்ளவனாக இருக்கிறான். எந்த மனிதரும் அறிவிற்கு எதிரான விசத்தை ஏற்றுக்கொள்ள கட்டாயத்திற்குள்ளாக மாட்டார். சகித்துக்கொள்ளும் ஆற்றல் மற்றும் திடஉறுதிக்கு மேலான எவ்வித மார்க்க சுமையும் சுமக்கப்படவில்லை. لَا يُكَلِّفُ اللّٰهُ نَفْسًا اِلَّا وُسْعَهَا (2:287).

இந்த வசனத்தில் தெளிவாக கூறப்படுவதாவது அல்லாஹ்வின் கட்டளைகளை யாரும் நிறைவேற்றவே இயலாததை போன்றதல்ல மேலும் மார்க்க கட்டளைகளை இறைவன் உலகில் இறக்கியது தமது மேலான உன்னதகூற்று உரைநடை மற்றும் சட்ட ஆற்றலை வேளிப்படுத்தல் மற்றும் தம்மகிமையின் பெருமையை மனிதனிம் வெளிப்படுத்துவதற்காக அல்ல மேலும் இவ்வாறு முன்பே தமது இடத்தில் வீற்றிருக்கிறான் வீனான பலகீனமான மனிதன் எங்கே இந்த கட்டளைகளின் படி செயல் படுவது எங்கே? இவ்வாறான வீண் செயலிலிருந்து இறைவன் மேலானவன் மற்றும் தூயவன் ஆவான். ஆம். உலகில் எந்த மனிதரும் -ரிஅத்தை பின்பற்ற, மற்றும் இறைவனின் கட்டளைகளை நிறைவேற்ற முடியாது என்பது கிருஸ்த்துவர்களின் கொள்கை ஆகும். பிறகு -ரிஅத்தை அனுப்பவேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதனை அறிவற்றவர்கள் சிந்திப்பதில்லை. அவர்களின் எண்ணம் மற்றும் நம்பிக்கையில் இறைவன் முதலில் நபிமார்களின் மீது -ரீஅத்தை இறக்கி ஒரு தேவையற்ற மற்றும் வீணான செயலை செய்தான் (நவூதுபில்லாஹ்).

உண்மையில் பாவமன்னிப்பு விவகாரத்தை நிறுவுவதற்காக , இறைவன் தூய இருப்பின் மீது இவ்வாறான கலங்கம் கற்பிக்கும் தேவை கிருஸ்துவர்களுக்கு ஏற்பட்டது. அம்மக்கள் தம்முடைய புதிய கொள்கைக்கான அடித்தளம் போடுவதற்கு இறைவனின் இருப்பில் எவ்வகையான தீய கலங்கம் ஏற்படுகிறது என்பதை பொருட்படுத்தாதது எனக்கு ஆச்சரியத்தையும் வியப்பையும் ஏற்படுத்துகிறது.

### திருக்குர்ஆன் போதனைகளின் ஒவ்வொரு கட்டளையும் காரண காரியம் மற்றும் சீர்திருத்தத்திற்கானதாகும்.

ஆம் திருக்குர்ஆன் போதனைகளில் இந்த மேன்மை உள்ளது அதன் ஒவ்வொரு கட்டளையும் காரண காரியம் மற்றும் சீர்திருத்தத்திற்கு உரியதாகும் எனவே அறிவு , ஞானம் , சிந்தனை, அச்சம் , மற்றும் நம்பிக்கையுடன் செயல்பட திருக்குர்ஆன் எண்ணற்ற இடங்களில் வலியுறுத்தியுள்ளது மேலும் திருக்குர்ஆன் மற்றும் இதர வேதங்களுக்கு இடையில் உள்ள வித்தியாசம் ஆகும்.மேலும் வேறு எந்த வேதமும் தமது போதனைகளை அறிவு மற்றும் சிந்தனையின் நுட்பமான மற்றும் சுதந்திர குறைகாணலுக்கு முன் வைக்க துனியவில்லை. மாறாக இன்ஜீல் மௌனமான தந்திரம் மற்றும் குறைகள் அதாவது இன்ஜீலின் போதனை அறிவின் வேகத்திற்கு எதிரில் உயிரற்ற மூளை ஆகும் என்பதை உணர்ந்து சுதாரித்து தமது கொள்கையில் திரித்துவம் மற்றும் பாவப்பரிகாரம் எவ்வாறான இரகசிம் எனில் மனித அறிவு அதன் ஆழம்வரை செல்லமுடியாத இந்த விசயத்தை நுழைத்துக் கொண்டனர்.

இதற்கு எதிரில் திருக்குர்அனின் போதனை இதுவாகும்:-

اِنَّ فِيْ خَلْقِ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَاخْتِلَافِ الَّيْلِ وَالنَّهَارِ لَاٰيٰتٍ لِّاُولِي الْاَلْبَابِ الَّذِيْنَ يَذْكُرُوْنَ اللّٰهَ الآية

அதாவது வானங்களின் படைப்பு மேலும் பூமியின் படைப்பு மற்றும் இரவு பகல் மாறிமாறி வருவதில் அறிவுடையோருக்கு இறைவனின் தெளிவை எடுத்துக் கூறுகிறது இஸ்லாம் மார்க்கம் அவன் பக்கம் அழைக்கிறது. இதில் அறிவுடையவர்கள் தமது அறிவு மற்றும் மூளையை பயன்படுத்த வேண்டும் (3: 191,192) என்ற கட்டளை எந்தளவு தெளிவாக உள்ளது.

(மல்ஃபூஸாத் பாகம் 1, பக்கம் 51-53 பதிப்பு 2018 காதியான்)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**நாம் இறைவனிடம் இறைவனை வேண்டினால் அவன் ஒவ்வொருவருக்கும் கிடைப்பான்**

**எவருக்கு இறைவன் கிடைத்து விடுவானோ அவரது காலடிக்குக் கீழ் உலகத்தின் ஒவ்வொரு அருளும் வந்து விடுகிறது**

**ஜுஆவில் கலந்து கொள்வது மற்றும் ஜாமிஆ பள்ளிவாசலுக்குச் சென்று ஜுமுஆவைத் தொழுவது மற்றும் இமாமின் குத்பாவைக் கேட்பது ஆகியவை உங்களுக்கு உங்கள் வியாபாரத்தை விட, உலகப் பணிகளை விட ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான மடங்கு சிறந்ததாகும்**

**வெற்றிகள் கிடைப்பது அல்லாஹ்வை நினைவு கூருவதிலும், அவனை வணங்குவதிலும்தான் தொடர்புடையதாக இருக்கின்றது**

**நாம் மிகுந்த கவலையுடன் நமது ஜுமுஆக்களைப் பாதுகாக்க வேண்டும். எவ்வாறு ரமலானின் இறுதி ஜுமுஆவிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதோ அவ்வாறே முழு வருடமும் ஜுமுஆவிற்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியமாகும்**

**அல்லாஹ்வின் உரிமையை செலுத்துவதற்கு அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவது அவசியமாகும்**

**வருடத்தின் ஒரு ஜுமுஆவை மட்டும் போதுமானதாகக் கருதாதீர்கள். மாறாக, ஒவ்வொரு ஜுமுஆவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்**

**நமது இன்றைய நாள் கடந்த நாளை விடச் சிறந்ததாக இல்லையென்றால் பிறகு நாம் உண்மையான நம்பிக்கையாளர் கிடையாது**

**அருளுக்குரிய ரமலான் மாதத்தின் இறுதி ஜுமுஆவில் ஜுமுஆ தொழுகையின் முக்கியத்துவம் மற்றும் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவது தொடர்பான தத்துவம் பற்றிய குறிப்பு**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 31 மே 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **ஹிஜ்ரத்** மாதம் **31 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اِذَا نُوْدِيَ لِلصَّلٰوةِ مِنْ يَّوْمِ الْجُمُعَةِ فَاسْعَوْا اِلٰى ذِكْرِ اللّٰهِ وَذَرُوا الْبَيْعَ ؕ ذٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ اِنْ كُنْتُمْ تَعْلَمُوْنَ○ فَاِذَا قُضِيَتِ الصَّلٰوةُ فَانْتَشِرُوْا فِي الْاَرْضِ وَابْتَغُوْا مِنْ فَضْلِ اللّٰهِ وَاذْكُرُوا اللّٰهَ كَثِيْرًا لَّعَلَّكُمْ تُفْلِحُوْنَ○ وَاِذَا رَاَوْا تِجَارَةً اَوْ لَهْوَا انْفَضُّوْۤا اِلَيْهَا وَتَرَكُوْكَ قَآئِمًا ؕ قُلْ مَا عِنْدَ اللّٰهِ خَيْرٌ مِّنَ اللَّهْوِ وَمِنَ التِّجَارَةِ ؕ وَاللّٰهُ خَيْرُ الرّٰزِقِيْنَ○

நம்பிக்கை கொண்டவர்களே! வெள்ளிக்கிழமையில் தொழுகைக்காக நீங்கள் அழைக்கப்பட்டால், நீங்கள் அல்லாஹ்வை நினைவு கூருவதற்கு விரைந்து செல்லுங்கள். (மற்றெல்லா) வியாபாரங்களையும் விட்டு விடுங்கள். நீங்கள் அறிந்திருப்பின் இது உங்களுக்கு மிகச் சிறந்ததாகும்.

தொழுகை நிறைவேற்றப்பட்டதும், பூமியில் பரவிச் சென்று அல்லாஹ்வின் அருளைத் தேடுங்கள். நீங்கள் வெற்றி பெறுவதற்காக அல்லாஹ்வை மிகுதியாக நினைவு கூறுங்கள்.

ஆனால் அவர்கள் வியாபாரத்தையோ, கேளிக்கைகளையோ காணும்போது, அதன்பால் ஈர்க்கப்பட்டு, உம்மை (தனித்து) நிற்க வைத்து விடுகின்றனர். நீர் கூறுவீராக: அல்லாஹ்விடமுள்ளது கேளிக்கையை விடவும், வியாபாரத்தை விடவும் மிகச் சிறந்ததாகும். அல்லாஹ் மிகச் சிறந்த உணவளிப்பவனாவான். (62:10–12)

இன்று இந்த ரமலானின் இறுதி ஜுமுஆவாகும். பொதுவாக இந்த நாளில் மக்களுக்கு குறிப்பான கவனம் ஏற்படுகிறது. இந்த குறிப்பான கவனத்தின் காரணமாக ஜுமுஆவில் கலந்து கொள்ள முயற்சி செய்கின்றனர். யதார்த்தமாக இன்றைய நாட்களில் பெரும்பான்மையான பள்ளிக் கூடங்களில் விடுமுறை ஆகும். இதன் அடிப்படையிலும் வந்திருப்பவர்களின் எண்ணிக்கை சிறப்பானதாக தென்படுகிறது. பொதுவாகவும் தென்படத்தான் செய்கின்றது.

நான் ஓதிய இந்த வசனங்கள் சூரா ஜுமுஆவின் இறுதி ருகூவின் வசனங்களாகும். இதில் அல்லாஹ் ஜுமுஆவின் முக்கியத்துவம் தொடர்பாக வெளிப்படையாக எடுத்துக் கூறிவிட்டான். ஆக ஜுமுஆவில் கலந்து கொள்வது அல்லாஹ்விடத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அல்லாஹ் தெளிவாகக் கூறுகின்றான். அதாவது ஜுமுஆ தொழுகைக்காக நீங்கள் அழைக்கப்பட்டால் நீங்கள் எவ்வித சோம்பேறித்தனத்தையும் வெளிப்படுத்தக் கூடாது. மாறாக, நீங்கள் எவ்வளவு வேலைப்பளுவில் இருந்தாலும், வியாபாரத்தின் உச்சபட்ச நேரமாக இருப்பினும் சரியே; நீங்கள் உடனடியாக கவனம் செலுத்தியவாறு ஜுமுஆ தொழுகையில் கலந்து கொள்ள வேண்டும். மேலும் அந்த நேரத்தில் உலகப் பணிகள் மற்றும் வியாபாரத்தின் மீது கவனம் செலுத்தாமல் இருப்பதனால் வியாபாரம் செய்யக்கூடிய ஒருவருக்கு லட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் நஷ்டம் ஏற்பட்டாலும் அதற்காகக் கவலைக் கொள்ளக் கூடாது. மேலும் இந்த நஷ்டத்தைப் பொருட்படுத்தாமல் ஜுமுஆவில் கலந்து கொள்ளுங்கள்.

ஏனென்றால் ஜுஆவில் கலந்து கொள்வது மற்றும் ஜாமிஆ பள்ளிவாசலுக்குச் சென்று ஜுமுஆவைத் தொழுவது மற்றும் இமாமின் குத்பாவைக் கேட்பது ஆகியவை உங்களுக்கு உங்கள் வியாபாரத்தை விட, உலகப் பணிகளை விட ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான மடங்கு சிறந்ததாகும். ஆனால் எவர் இதன் உண்மையான ஞானத்தைப் பெற்றவராக இருக்கின்றாரோ அவருக்கே இதனைப் பற்றிய உணர்வு இருக்கும்.

அல்லாஹ் கூறுகின்றான்: உண்மையான ஞானத்தைப் பெற்றிருப்பவர் நிச்சயமாக இந்த உலகப் பணிகளுக்கு இரண்டாம் நிலையையே வழங்குவார்.

மேலும் அல்லாஹ் இதனையும் கூறுகின்றான்: அதாவது ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு நீங்கள் சுதந்திரமாக செயல்படலாம். செல்லுங்கள். உங்களது உலகப் பணிகளில், வியாபாரங்களில் ஈடுபடுங்கள். அல்லாஹ் உங்களது உலகப் பணிகளிலும் பரக்கத் செய்வான். ஆனால் இங்கு இதனையும் அல்லாஹ் தெளிவுபடுத்தி விட்டான். அதாவது உங்களது இறைவணக்கங்களை ஜுமுஆ வரை மட்டும் எல்லைக்குட்பட்டதாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். மாறாக,

அல்லாஹ் உங்களுக்கு எந்நேரமும் நினைவில் இருக்க வேண்டும். அல்லாஹ்வை நினைவு கூர்வதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். அவ்வாறு செய்தால் பிறகு உங்களுக்கு முன்பை விட அதிகமான வெற்றிகள் கிடைக்கும். இம்மையும், மறுமையும் கிடைக்கும்.

இறை தியானம் செய்பவர்கள் அல்லாஹ்வை நினைவு கூரும்போது, ஜுமுஆவிற்குப் பிறகு நாம் அஸர் தொழுகையை தொழ வேண்டும். இதுவும் கடமைகளில் அடங்கும். மேலும் மக்ரிப் தொழுகையும் தொழ வேண்டும். இஷா தொழுகையும் தொழ வேண்டும். இந்த தொழுகைகள் கடமைகளில் அடங்கும். மேலும் உலகப் பணிகளாக இந்தாலும் அல்லது மற்ற அருட்கொடைகளாக இருந்தாலும் அவை அல்லாஹ்வின் அருளினாலேயே கிடைக்கும் என்பதையும் நினைவில் கொள்வர்.

ஆக வெற்றிகள் கிடைப்பது அல்லாஹ்வை நினைவு கூருவதிலும், அவனை வணங்குவதிலும்தான் தொடர்புடையதாக இருக்கின்றது. ஜுமுஆவைப் பேணுவது மற்றும் அல்லாஹ்வைத் துதிப்பது மற்றும் அவனது இறைவணக்கத்திற்கான உரிமையை செலுத்துவது ஆகியவற்றிற்கான முயற்சியை ரமலான் மாதத்தல் மட்டும் மேற்கொள்ளக் கூடாது. மாறாக, இந்த வசனத்தில் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அதாவது ஜுமுஆக்கள் தொடர்பாக இது ஒரு பொதுவான மற்றும் குறிப்பான கட்டளையாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஜுமுஆவின் முக்கியத்துவம் தொடர்பாக எடுத்துக் கூறியவாறு கூறுகின்றார்கள்: ஜுமுஆவின் நாள் பெருநாள் ஆகும். இந்த பெருநாள் மற்ற பெருநாளைக் காட்டிலும் மிக உயர்வானதாகும். மேலும் எவ்வாறு உயர்வானதாகும்.

அன்னார் கூறுகின்றார்கள்: இந்த பெருநாளுக்காக ஜுமுஆ அதிகாரம் இருக்கிறது. அதாவது சூரா ஜுமுஆவில் ஜுமுஆவைப் குறிப்பாக பேணுவதன் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளது.

மேலும் ஜுமுஆவின் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் உமர் (ரலி) மற்றும் ஒரு யூதனுக்கு இடையே நடைபெற்ற ஒரு கூற்றை அன்னார் எடுத்துக் கூறுகின்றார்கள்.

اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ அதாவது இன்று நான் உங்களுக்காக உங்களது மார்க்கத்தை முழுமை செய்து விட்டேன் என்ற வசனம் இறங்கியபோது ஒரு யூதன், இந்த வசனம் இறங்கிய நாளை பெருநாளாக ஆக்கியிருக்கலாமே அல்லது இந்த வசனம் எங்களுக்கு இறங்கியிருந்தால் நாங்கள் இந்த நாளை பெருநாளாக கொண்டாடியிருப்போம் என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், ஜுமுஆ பெருநாளே ஆகும். ஏனென்றால் இந்த வசனம் ஜுமுஆ நாளன்று அருளப்பட்டது என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பெரும்பான்மையான மக்கள் இந்த பெருநாளைப் பற்றி அறியாதவர்களாக இருக்கின்றனர்.

(மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 399)

எந்தப் பெருநாளை அல்லாஹ் ஒவ்வொரு வாரமும் கொண்டாடும்படி கட்டளையிட்டுள்ளானோ, மேலும் அந்த நாளில் மார்க்கம் முழுமையடைந்ததைப் பற்றிய செய்தியை வழங்கினானோ, மேலும் அல்லாஹ் தமது அருட்களை முழுமை செய்து விட்டதாக நற்செய்தி வழங்கினானோ அந்த நாளுக்கு அந்த அளவிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை. மேலும் அவர்கள், ரமலானின் இறுதி ஜுஆவில் குறிப்பாக கலந்து கொண்டு நாம் அனைத்து ஜுமுஆவின் நற்கூலியையும் பெற்று விட்டோம் என்று கருதுகின்றனர்.

எனவே நாம் மிகுந்த கவலையுடன் நமது ஜுமுஆக்களைப் பாதுகாக்க வேண்டும். எவ்வாறு ரமலானின் இறுதி ஜுமுஆவிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதோ அவ்வாறே முழு வருடமும் ஜுமுஆவிற்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியமாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்: ஒவ்வொரு நம்பிக்கையாளருக்கும் அவர் உண்மையான நம்பிக்கையாளர் என்றால் பிறகு அவர் இந்த விஷயத்தை கருத்தில் கொள்ள வேண்டும். ஆனால் என்ன நடக்கிறது? பெரும்பாலார் இந்த விஷயத்தின் பக்கம் கவனம் செலுத்துவதில்லை. மேலும் உலக வியாபாரங்கள் மற்றும உலகத்தின் மீதுள்ள ஈர்ப்பிலேயே அவர்கள் தமது ஜுமுஆவை வீணாக்கி விடுகின்றனர்.

அல்லாஹ் கூறுகின்றான்: உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். அதாவது அல்லாஹ்விடம் இருப்பது இந்த உலகப் பொருட்கள், செல்வங்கள் ஆகியவற்றை விட மிகச் சிறந்ததாகும். மேலும் அல்லாஹ்வே உங்களுக்கு வாழ்வாதாரத்திற்கான ஏற்பாட்டைச் செய்கின்றான். ஆக இது மிக முக்கியமான மேலும் ஒவ்வொரு நம்பிக்கையாளருக்கும் கவனம் செலுத்த வேண்டிய ஒரு விஷயமாகும். மேலும் குறிப்பாக நாம் இந்த காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டுள்ளோம். நாம் இதன் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறி வந்தார்கள்: அதாவது உண்மையான நம்பிக்கையாளர் அஹ்மதியே ஆவார். அவர்கள் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

(ஹகாயிகுல் ஃபுர்கான் தொகுதி 4 பக்கம் 122,123)

ஆக இதை ஏற்றுக் கொண்டிருப்பது ஒரு பொறுப்பை நம்மீது பொறுப்பை சுமத்துகின்றது. அதாவது நாம் நமது செயல்களை அல்லாஹ்வின் போதனைகளுக்கேற்ப ஆக்கிக் கொள்ள வேண்டும். உலக ஆசைகள் நமது முன்னுரிமையாக இருக்கக் கூடாது. மாறாக, அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவது நமது முன்னுரிமையாக இருக்க வேண்டும். ஆனால் நம்மில் பெரும்பாலார் இந்த விஷயங்களை அதாவது நாம் ஏன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளோம் என்பதை மறந்து விட்டனர். அன்னார் அல்லாஹ்வுடனான தொடர்பில் நம்மை வலுப்படுத்துவதற்காக வருகை தந்தார்கள். மேலும் நமது அனைத்து முன்னுரிமைகளும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவது மற்றும் அவனது அன்பைப் பெறுவதாகவே இருக்க வேண்டும் என்பதற்காகவே அன்னார் வருகை தந்தார்கள்.

நமது உலகியல் விருப்பங்கள் முழுமையடையாதபோது மட்டும், நாம் தொழக் கூடியவர்களாகவும், துஆக்களின் பக்கம் கவனம் செலுத்தக் கூடியவர்களாகவும் இருக்கக்கூடாது. மேலும் நாம் அல்லாஹ்விற்கு முன்னிலையில் இந்த விருப்பங்கள் முழுமையடைவதற்காக குனியக்கூடாது. மேலும் நமக்கு அல்லாஹ்வின் திருப்தி மேலும் அதனைப் பெறுவதன் முக்கியத்துவம் என்ன என்பது தெரியாமல் இருக்கக்கூடாது. மேலும் நாம் நமது விருப்பங்கள் மற்றும் உலகத் தேவைகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கக் கூடியவர்களாக இருக்கக் கூடாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் உண்மையாகவே கூறுகின்றேன். இது அல்லாஹ்வால் நற்பேறு பெற்றவர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள ஒரு நிகழ்ச்சியாகும். இதிலிருந்து பயன் பெறுபவர்களே வாழ்த்துக்குரியவர்கள். எந்த மக்கள் என்னுடன் தொடர்பு வைத்துள்ளீர்களோ அவர்கள் நாம் எதனைப் பெற வேண்டுமோ அதனைப் பெற்று விட்டோம் என்று ஒருபோதும் ஆணவம்

கொள்ளாதீர்கள். நீங்கள் அந்த மறுப்பாளர்களை விட நற்பேற்றைப் பெறுவதற்கு அருகில் இருப்பவர்கள் என்பது உண்மைதான். நற்பேற்றைப் பெறுவதற்கு அருகில் இருக்கின்றீர்கள். மறுப்பவர்கள் தமது கடுமையான மறுப்பு மற்றும் ஏளனப்படுத்தியதன் காரணமாக இறைவனை அவர்கள் கோபமையடச் செய்துள்ளனர்.

ஹுஸூர் அவர்கள் கூறுகின்றார்கள்: நீங்கள் நல்லெண்ணத்திற்கேற்ப செயல்பட்டு இறைவனது கோபத்திலிருந்து தம்மைத்தாமே பாதுகாப்பதற்கு கவலை கொண்டுள்ளீர்கள் என்பது உண்மைதான். ஆனால் உண்மையான விஷயம் என்னவென்றால், அல்லாஹ் தற்போது நிரந்தர வாழ்விற்காக ஆயத்தப்படுத்தியுள்ள இந்த நீரூற்றிற்கு அருகில் நீங்கள் வந்துள்ளீர்கள். ஆம்! தண்ணீர் அருந்துவது எஞ்சியுள்ளது. இறைவனது அருளின் மூலமாக, அது உங்களது தாகத்தை தணிக்க வேண்டும் என்று அவனிடம் நற்பாக்கியத்தை வேண்டுங்கள். ஏனென்றால், இறைவனது விருப்பமின்றி எதுவும் நடக்க இயலாது.

அன்னார் கூறினார்கள்: இதை நிச்சயமாக நான் அறிவேன். அதாவது எவர் இந்த நீரூற்றிலிருந்து தண்ணீர் அருந்துவாரோ அவர் அழிவிற்குள்ளாக மாட்டார். ஏனென்றால் இந்த தண்ணீர் வாழ்வை அளிக்கின்றது. மேலும் அழிவிலிருந்து பாதுகாக்கின்றது. மேலும் ஷய்த்தானின் தாக்குதலிலிருந்து பாதுகாக்கின்றது. இந்த நீரூற்றின் தண்ணீரை தாகம் தீர அருந்துவற்குரிய வழி என்ன? அது என்னவென்றால், உங்கள் மீது இறைவன் ஏற்படுத்தியுள்ள இரு உரிமைகளை நீங்கள் முழுமையாக செலுத்துங்கள். அதில் ஒன்று இறைவனது உரிமையாகும். மற்றொன்று அடியார்களின் உரிமையாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 184,185)

ஆக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தெளிவாக இதைக் கூறி விட்டார்கள். அதாவது தமது செயல்களை இறைவனது போதனைகளுக்கேற்ப ஆக்கிக் கொள்ளுங்கள். மேலும் என்னை ஏற்றுக் கொண்ட பிறகு உங்கள் இறைவணக்கத்தின் தரத்தை உயர்த்துங்கள். மேலும் அடியார்களுக்குரிய உரிமையை செலுத்துவதன் தரத்தையும் உயர்த்த வேண்டும். அவ்வாறில்லையென்றால் அல்லாஹ்வின் அருட்களை பெறக் கூடியவர்களாக நீங்கள் ஆக முடியாது. நீரூற்றிலிருந்து தண்ணீர் அருந்துவதற்காக நமது முன்னுரிமைகளை மாற்ற வேண்டியது வரும்.

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: ஹஸ்ரத் சாஹிப் அதாவது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்: இந்த நீரூற்றிலிருந்து தண்ணீர் அருந்துவது இப்போது எஞ்சியுள்ளது.

அன்னார் கூறுகின்றார்கள்: இது என்னைப் பற்றி கூறப்படவில்லையே என்று எனக்குத் தோன்றுகிறது.

(ஹகாயிகுல் ஃபுர்கான் தொகுதி 4 பக்கம் 126)

ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் அந்தஸ்தைப் பற்றி நம் அனைவருக்கும் தெளிவாகத் தெரியும். ஏனென்றால் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அன்னாருக்கு மிகுந்த கண்ணியத்தையும், உயர்ந்த அந்தஸ்தையும் வழங்கியுள்ளார்கள். அன்னாரே இந்த கவலையில் இருக்கின்றார்கள் என்றால் பிறகு நாம் எந்த அளவுக்கு இது பற்றி கவலை கொள்ள வேண்டும். அதாவது நாம் எவ்வாறு இந்த நீரூற்றிலிருந்து தண்ணீர் அருந்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று கவலை கொள்ள வேண்டும். மேலும் நாம் எவ்வாறு பைஅத்தின் உரிமையை செலுத்துபவர்களாக ஆக முடியும் என்று கவலை கொள்ள வேண்டும். ஆக அல்லாஹ்வின் உரிமையை செலுத்துவதற்காக அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவது அவசியமாகும். மேலும் நாம் அல்லாஹ்விற்குரிய இறைவணக்கத்தின் உரிமையை செலுத்து விட்டோமா? என்ற இந்த விஷயத்தை கண்முன் வைக்க வேண்டியது அவசியமாகும். அல்லாஹ் நமது படைப்பின் நோக்கமாக இறைவணக்கத்தை வைத்துள்ளான்.

அவன் கூறுகின்றான்: وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْإِنسَ إِلَّا لِيَعْبُدُونِ அதாவது நான் ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். ஆக, அல்லாஹ் நமது படைப்பின் நோக்கத்தை இங்கு தெளிவுபடுத்தி விட்டான். நீங்கள் ரமலானின் இறுதி ஜுமுஆவைத் தொழுததினால் எனது கட்டளைகளை நிறைவேற்றி விட்டீர்கள். மேலும் இறைவணக்கத்தின் எனது உரிமையை செலுத்து விட்டீர்கள் என்று அவன் கூறவில்லை. மாறாக, இதுவொரு நிரந்தரமாக செய்யப்படக்கூடிய செயலாகும். இதனை நீங்கள் உங்களுக்கு நினைவு வந்த நாளிலிருந்து இந்த உலகத்திலிருந்து செல்லும் வரை நிறைவேற்ற வேண்டும் என்று கூறுகின்றான். ஆக, வருடத்தில் ஒரு ஜுமுஆவை மட்டும் போதுமானதாகக் கருதாதீர்கள். மாறாக, ஒவ்வொரு ஜுமுஆவும் முக்கியம் வாய்ந்ததாகும்.

பிறகு ஜுமுஆவை நிறைவேற்றுவது தொடர்பாக கவனமூட்டியவாறு, நீங்கள் ஜுமுஆவைத் நிறைவேற்றி விட்டு எனது உரிமைகளை செலுத்தக் கூடியவர்களாக ஆகி விட்டீர்கள். அல்லது தொழுகைகளை தொழுது எனது உரிமைகளை நிறைவேற்றக் கூடியவர்களாக ஆகி விட்டீர்கள் என்று அல்லாஹ் கூறவில்லை.. மேலும் இதனால் அல்லாஹ்விற்கே பயன் ஏற்பட்டுள்ளது. மேலும் அல்லாஹ்விற்கு நமது தொழுகைகள் மற்றும் நமது ஜுமுஆவின் தேவை உள்ளது என்பது கிடையாது. மாறாக, நீங்கள் ஜுமுஆவிற்கு வந்து, தொழுது, குத்பாவைக் கேட்கின்றீர்கள். மேலும் அப்போது இறை தியானம் செய்கின்றீர்கள். அப்போது ஒரு நேரம் வருகின்றது. அது எப்படிப்பட்டதாக இருக்கின்றது என்றால் அடியான் அல்லாஹ்விடம் எந்த துஆவைக் கேட்டாலும் அல்லாஹ் அதனை ஏற்றுக் கொள்கின்றான்.

அதாவது ஹராமானது அல்லாமல் மனிதன் வேறு எதை வேண்டினாலும் மேலும் அந்த நேரம் அவனுக்கு கிடைத்து விட்டால் பிறகு அல்லாஹ் அவனது துஆக்களை ஏற்றுக் கொள்கின்றான்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஜுமுஆ... ஹதீஸ் எண் 852)

இந்த நேரம் ஒரு குறிப்பிட்ட ஜுமுஆவிற்கு மட்டும் கிடையாது. மாறாக ஒவ்வொரு ஜுமுஆவிற்கும் உரியதாகும்.

பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஜுமுஆவின் முக்கியத்துவம் தொடர்பாக கவனமூட்டியவாறு கூறினார்கள்: அல்லாஹ் மற்றும் மறுமை நாளின் மீது ஈமான் கொண்டுள்ள ஒவ்வொரு நபர் மீதும் ஜுமுஆ நாளன்று ஜுமுஆ தொழுவது கடமையாக்கப்பட்டுள்ளது. நோயாளிகள், பயணிகள், பெண்கள், குழந்தைகள் மற்றும் அடிமைகள் ஆகியோரைத் தவிர மற்ற அனைவர் மீதும் கடமையாக்கப்பட்டுள்ளது. ஏனென்றால் இவர்கள் அனைவரும் நிர்பந்தத்திற்கு ஆளானவர்கள்.

மேலும் கூறினார்கள்: எவர் கேளிக்கை மற்றும் வியாபாரத்தின் காரணமாக ஜுமுஆவைப் பொருட்படுத்தாமல் இருந்தாரோ அல்லாஹ்வும் அவரைப் பொருட்படுத்தாமலேயே நடந்து கொள்வான். நிச்சயமாக அல்லாஹ் தன்னிறைவு பெற்றவனும், புகழுக்குரியவனும் ஆவான்.

(கன்ஸுல் உம்மால் தொகுதி 7 பக்கம் 726 கிதாபுஸ் சலாத் ஹதீஸ் எண் 21120)

அல்லாஹ்விற்கு உங்களது எந்தவொரு தேவையும் இல்லை. மாறாக, அவன் அருள்பாலிக்கக் கூடியவனாகாவன். மேலும்

அல்லாஹ் அருள்பாலிப்பது இந்த விஷயத்தை ஒரு நம்பிக்கையாளரிடம் எதிர்பார்க்கின்றது. அதாவது அவனது புகழை எடுத்துரைக்க வேண்டும்.

பிறகு அன்னார் இதனையும் கூறினார்கள்: ஜுமுஆ நாளன்று நன்மைகளின் கூலி பல மடங்கு அதிகரித்து விடுகின்றது.

(கன்ஸுல் உம்மால் தொகுதி 7 பக்கம் 712 கிதாபுஸ் சலாத் ஹதீஸ் எண் 21057)

அல்லாஹ்வின் கட்டளையை விட மேலும் கட்டளைகளின்படி செயல்படுவதைவிட பெரிதாக வேறு என்ன நன்மை இருக்கிறது? ஆக ஒரு நம்பிக்கையாளர் அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக அவனது கட்டளைகளின்படி செயல்பட வேண்டும். அதில் ஒரு கட்டளை ஜுமுஆவிற்கு வருவதுமாகும். தொழுகைகள் மற்றும் இறைவணக்கத்தின் பக்கம் கவனம் செலுத்துவதும் ஆகும். ஆக இது ஒரு மிகப்பெரிய நன்மையாகும்.

பிறகு எந்த அளவுக்கு அல்லாஹ் ஒரு நம்பிக்கையாளருக்கு அதற்கான நற்கூலியையும் வழங்குகின்றான். அவர் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வேண்டும் என்பதற்காக எந்த நன்மைகளை, இறைவணக்கங்களை செய்கின்றாரோ மற்றும் ஜுமுஆவில் கலந்து கொள்வதனால் அல்லாஹ் அந்த நம்பிக்கையாளருக்கு நற்கூலி வழங்குகின்றான். மேலும் எந்த உலக ஆசைகளும் முன்னுரிமையாக அவர்களுக்கு இருப்பதில்லை.

ஜுமுஆவை காரணம் இன்றி விடுபவரைப் பற்றி பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த எச்சரிக்கையையும் செய்துள்ளார்கள்:

எவராவது ஒருவர் எவ்வித காரணமும் இன்றி ஜுமுஆவை விடுவாரோ அவரது செயல் பதிவேட்டில் அவர் முனாஃபிக் என்று எழுதப்படும்.

(கன்ஸுல் உம்மால் தொகுதி 7 பக்கம் 730 கிதாபுஸ் சலாத் ஹதீஸ் எண் 21144)

மேலும் கூறினார்கள்: எவர் சோம்பேறித்தனத்தை வெளிப்படுத்தியவாறு மூன்று ஜுமுஆக்களை தொடர்ச்சியாக விடுவாரோ அல்லாஹ் அவரது உள்ளத்தில் முத்திரையிட்டு விடுவான். (சுனன் அபீ தாவூது, கிதாபுஸ் சலாத்... ஹதீஸ் எண் 1052)

ஆக இது மிகவும் அச்சத்திற்குரிய இடமாகும். ஏனென்றால் முத்திரையிடப்பட்டு விட்டால் பிறகு நன்மைகள் செய்வதற்கு நற்பாக்கியம் குறைந்து கொண்டே செல்கின்றது. மேலும் தொழுகைகளுக்கு வருவது, ஜுமுஆவுக்கு வருவது ஆகியவற்றில் நயவஞ்சகத்தனத்தை உருவாக்கிக் கொண்டே செல்கின்றது. ஆக இது மிகவும் அச்சத்திற்குரிய இடமாகும். மேலும் மிகவும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

ஒரு சந்தர்ப்பத்தில் அன்னார் கூறினார்கள்: ஜுமுஆ தொழுகைக்காக வாருங்கள். ஒரு நபர் சுவர்க்கம் செல்வதற்கு தகுதியானவராக இருந்தும், ஜுமுஆவிலிருந்து பின்தங்கி இருந்தவாறு சுவர்க்கம் செல்வதிலிருந்து பின்தங்கி விடுகின்றார்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 6 பக்கம் 752, முஸ்னது ஸம்ரா பின் ஜன்தப் (ரலி) – ஹதீஸ் எண் 20373 – 1998 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாலுல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

அவர் அதிகமான நன்மைகளைச் செய்கின்றார். அதனால் அது அவரை சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்ல இயலும். ஆனால் பின்தங்கி இருந்ததினால் சுவர்க்கம் செல்வதிலிருந்து பின்தங்கி விடுகின்றார். ஆக எண்ணற்ற சந்தர்ப்பங்களில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஜுமுஆவில் கலந்து கொள்வதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். மாறாக எவ்வித காரணமுமின்றி கலந்து கொள்ளாமல் இருப்பவர்களுக்கு எச்சரிக்கையும் செய்துள்ளார்கள்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கூட ரமலானின் இறுதி ஜுமுஆவை தொழுங்கள். எனவே நீங்கள் மன்னிக்கப்படுவீர்கள் என்று அன்னார் கூறியதில்லை. நாம் இப்போது அன்னாரது ஒரு கூற்றைப் பார்த்தோம். அதில் அன்னார் கூறுகின்றார்கள்: வியாபாரம் மற்றும் கேளிக்கை, உலகப் பணிகளின் காரணமாக ஜுமுஆவை விடக் கூடியவர்கள் மற்றும் ஜுமுஆவை நிறைவேற்றக் கவனமற்றவர்களாக இருப்பவர்களுடனும் அல்லாஹ்வும் கவனமற்ற முறையிலேயே நடந்து கொள்கின்றான்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு நம்பிக்கையாளரின் அடையாளமாக, இறைவணக்கத்தின் உரிமையை செலுத்தக் கூடியவர்களாக, ஒரு தொழுகைக்குப் பிறகு அடுத்த தொழுகைக்காக கவலை கொள்பவர்களைப் பற்றியே கூறியுள்ளார்கள். அவர்கள் ஒரு தொழுகைக்குப் பிறகு அடுத்த தொழுகைக்கு கவலை கொள்பவர்களாக இருக்கின்றனர். அதனை எதிர்பார்த்து இருக்கின்றனர். மேலும் ஒரு ஜுமுஆவிற்குப் பிறகு அடுத்த ஜுமுஆவிற்குக் கவலை கொள்பவர்களாக இருக்கின்றனர். மேலும் அதனை எதிர் பார்த்து இருக்கின்றனர். மேலும் ஒரு ரமலானிற்குப் பிறகு அடுத்த ரமலானிற்குக் கவலை கொள்ளக் கூடியவர்களாக இருக்கின்றனர். மேலும் அதை எதிர்பார்த்து இருக்கின்றனர். அதுவன்றி அவர்கள் உலக ஆசைகள் மற்றும் பணிகளுக்காகத் தமது ஜுமுஆக்கள் மற்றும் தொழுகைகளை வீணாக்குவதில்லை.

எனவே நமது இறைவணக்கத்தின் பக்கம் நாம் கவலை கொள்ள வேண்டியது அவசியமாகும். நமது முன்னுரிமைகளைச் சரியான வழியில் கொண்டு செல்வது அவசியமாகும். அல்லாஹ்வை அடைவதற்காக அந்த அந்தஸ்தின் ஞானத்தைப் பற்றி தெரிந்திருப்பது அவசியமாகும். வெறும் நாவளவில் இதைக் கூறி விடுவதால் மட்டும் இது கிடைத்து விடாது.

ஆனால் நாம் சிந்தித்துப் பார்த்தால், அல்லாஹ்வினுடைய அந்தஸ்து மற்றும் அவனது கண்ணியத்தை நமது செயல்கள் சரியாக அடையாளங்கண்டு கொள்ளவில்லை. நாம் இறைவனை முழுமையாக அடையாளங்கண்டு கொண்டுள்ளோம் என்று சொல்கின்ற அளவிற்கு நமது செயல்கள் இல்லை. மாறாக, நமது துஆக்கள் கூட நமது சொந்த நோக்கத்திற்காகவே இருக்கின்றது. ஆனால் அதில் ஒரு நிரந்தர மனப்பான்மையுடன் இறைவனை அடைய வேண்டும் என்பதற்காக இருக்க வேண்டும். நமது உள்ளம் வெறும் ஜுமுஆவிற்கு மட்டுமின்றி ஐந்து நேரத் தொழுகைகளுக்காகவும் பள்ளிவாசலில் பக்கம் இருக்க வேண்டும்.

ஆனால் நான் கூறியது போன்று உண்மையிலேயே நமக்கு இது பற்றிய ஞானம் கிடையாது. நாம் தற்காலிக மற்றும் தற்போதைய அவசியத்திற்கு முக்கியத்துவம் தருகின்றோம். மேலும் நிரந்தர மற்றும் எப்போதும் நிலைத்திருக்கக்கூடிய தேவைக்கு இரண்டாம் பட்ச அந்தஸ்தையே வழங்குகின்றோம். தொழுகைகள் மற்றும் ஜுமுஆக்களை நாம் விட்டு விடுகின்றோம். நமது தற்காலிக உலக பயன்களுக்காக, அல்லாஹ்விடம் மன்னிப்பு கோரி விடுவோம். பிறகு அல்லாஹ் மன்னித்து விடுவான். எனவே எந்த வித்தியாசம் ஏற்படப்போகிறது என்று கூறி விடுகின்றோம்.

இந்த உலகப் பணிகளை செய்வோமே. இந்த பணி கையை விட்டு நழுவி விடக்கூடாதே. இந்த வியாபாரம் மீண்டும் கிடைக்குமா? கிடைக்காதா? என்று தெரியாது என்று ஒரு வியாபாரி கூறுகின்றார். மேலும் தமது பணிக்காக ஏதாவதொரு

மேலதிகாரியிடம் சென்றிருக்கும்போது அவர் மகிழ்ச்சியடையச் செய்யவில்லை என்றால், அவருடைய MOOD நன்றாக இருக்கிறது. எனவே அவரிடம் இப்போது எனது தொழுகைக்கான நேரம் ஆகி விட்டது. நான் தொழுகைக்காக செல்கின்றேன். அல்லது ஜுமுஆ தொழ செல்கின்றேன் என்று கூறிவதால் அந்த மேலதிகாரி கோபமடைந்து விடக்கூடாதே.

மேலும் அதனால் அவரிடமிருந்து பயன்பெறுவதிலிருந்து பாக்கியமிழந்தவானாக இருந்து விடக்கூடாதே என்ற எண்ணம் வந்தால் பிறகு நமது முன்னுரிமைகள் முற்றிலும் வேறொன்றாகும். உலக முன்னுரிமைகள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறும் முன்னுரிமைகளை விட முக்கியத்துவம் வழங்குகின்றது. மேலும் இவ்வாறு அல்லாஹ்விற்குப் போட்டியாக பல விருப்பங்கள் இருக்கின்றன. பிறகு அவைகளுக்கு இரண்டாம் பட்ச அந்தஸ்தை வழங்குவதற்கு பகரமாக முன்னுரிமையைப் பெற்று விடுகிறது. அல்லாஹ் பின்னுக்கு சென்று விடுகின்றான். மேலும் உலக விருப்பங்கள் மேலோங்கி விடுகின்றன.

பிறகு நாம் பெருமானார் (ஸல்) அவர்களின் கூறிய, அதாவது நாம் அல்லாஹ்வை மறந்து விட்டால், அவனது கட்டளைகளை உலக ஆசைகளுக்குப் பின்னால் வைத்து விட்டால் அல்லாஹ்வும் நம்முடன் அவ்வாறே நடந்து கொள்வான் என்பதையும், சுவர்க்கத்திற்குச் செல்வதற்கு தகுதியுடையவர்களாக இருந்தும் கவனமற்றத் தன்மையின் காரணமாக அப்படிப்பட்ட மனிதன் சுவர்க்கம் செல்வதிலிருந்து இழப்பிற்குரியவனாக ஆகி விடுகின்றான் என்பதை மறந்து விடுகின்றோம்.

ஆக ஒரு நம்பிக்கையாளரின் பணி என்னவென்றால், எனது வியாபாரங்களிலும், எனது பணிகளிலும் அல்லாஹ்வின் அருளினாலேயே பரக்கத் ஏற்படும் என்ற இந்த விஷயத்தை கண்முன் நிறுத்த வேண்டும். ஆக அல்லாஹ்வின் அருளினாலேயே பரக்கத் ஏற்படும் என்றால் பிறகு நான் ஏன் முதலில் அல்லாஹ்வின் உரிமையைச் செலுத்துவதற்கு முயற்சி செய்யக் கூடாது?

ஆக இந்த தத்துவத்தை ஒவ்வொருவரும் புரிந்து கொள்வது அவசியமாகும். இதனை நாம் புரிந்து விட்டால் பிறகு நமது பள்ளிவாசல்கள் ரமலான் மட்டுமின்றி ஐவேளை தொழுகை நேரத்திலும் நிறைந்திருக்கும். மேலும் ஜுமுஆவிலும் நிறைந்திருக்கும். மாறாக, சிறியதாகி விடும். மேலும் இதுவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கமாகும். அன்னார் அடியார்களை இறைவனுக்கு அருகில் கொண்டு வருவதற்காகத் தோன்றினார்கள்.

மேலும் இதுவே பைஅத்தின் நோக்கமும் அகும். அதாவது நாம் நம்மை நாமே இறைவனுக்கு அருகில் ஆக்கிக் கொள்ள வேண்டும். மேலும் அவனோடு தொடர்பை ஏற்படுத்த வேண்டும். மேலும் அவனது உண்மையான அடியாராக ஆக வேண்டும். நமது தொழுகைகள், நமது ஜுமுஆக்கள், நமது நோன்புகள், நமது பெருநாள்கள் ஆகியவை இறை நெருக்கத்தைப் பெறுவதற்கும் அவனைப் பெறுவதற்குமாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு வருடமும் ரமலானின் நோன்பையும் அல்லாஹ் இதன் காரணமாகவே நிர்ணயித்துள்ளான். அதாவது ஒரு மாதத்தில் குறிப்பாக ஒரு நம்பிக்கையாளர் தமது நன்மை மற்றும் இறைவணக்கத்தின் தரத்தை உயர்த்த வேண்டும். மேலும் அதில் நிலைத்திருக்க வேண்டும். பிறகு அடுத்த ரமலானில் இதற்கு அடுத்த அடி எடுத்து வைக்க வேண்டும். அதுவன்றி மீண்டும் திரும்பி அந்த நிலைக்கே வந்து விடக்கூடாது. ரமலானுக்குப் பிறகு நாம் நமது முந்தைய நிலையே நம்மீது இருக்கக்கூடாது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இதனையே நமக்கு கூறியுள்ளார்கள்: அதாவது இன்றைய நமது கழிந்த நாளை விடச் சிறந்ததாக இல்லையென்றால் பிறகு நாம் உண்மையான நம்பிக்கையாளர் கிடையாது.

(மல்ஃபூஸாத் தொகுதி 10 பக்கம் 138)

எனவே நாம் ஜுமுஆவை வழியனுப்புவதற்காக இன்று ஒன்று கூடவில்லை. மாறாக, நமது நன்மைகளில், நமது இறைவணக்கத்தில், அல்லாஹ்வுடனான நமது அன்பில் முன்னேறியவாறு நமது அடியை வலுப்படுத்துவதற்காகவும், மேலும் அதற்காக துஆ செய்வதற்காகவும் நாம் இங்கு ஒன்று கூடியுள்ளோம்.

மேலும் நாம் இந்த உடன்படிக்கை எடுக்க வேண்டும். அதாவது நாம் இனி இறைவனுடன் நமது தொடர்பை அதிகரிக்க வேண்டும். இன்ஷா அல்லாஹ். நமக்கு இறைநெருக்கத்தின் முக்கியத்துவம் தொடர்பான உணர்வு இருக்கும் போதுதான் இந்த உடன்படிக்கை மற்றும் துஆவை செய்ய முடியும். மேலும் இதனைப் பற்றிய கண்ணியமும் அறிவும் இருக்கும்போதுதான் நடைபெறும். மேலும் அல்லாஹ்வை உண்மையில் அனைத்து ஆற்றல்களின் எஜமானனாகவும், அனைத்துப் பணிகளிலும் சிறந்த முடிவு வரை கொண்டு செல்வதற்கான வழியாகவும் கருதும் போதுதான் இது நடைபெறும்.

ஆனால் விளையாட்டு மற்றும் உலக வியாபாரங்களின் மீதான கண்ணியம் அல்லாஹ்வின் கண்ணியத்தை விட அதிகமாக இருந்தால் பிறகு அது வைரத்தின் மதிப்பைப் பற்றித் தெரியாத அந்த குழந்தையின் நிலையைப் போன்றதாகும். அவர்களுக்கு எங்கிருந்தாவது வைரம் கிடைத்து விட்டால் பிறகு அதை அவர்கள் கோலிக்காயைப் என்று கருதுகின்றனர். கைகளினால் அவர்கள் அடித்து விளையாடுகின்ற கோலிக்காயைப் போன்று கருகின்றனர். இவ்வாறு அவர்கள் அடித்து விளையாடி யாரிடம் அதிகம் இருக்கின்றதோ அவர் வெற்றி பெற்று விடுகின்றார். பிறகு அவர்கள் இந்த வைரத்தை கொண்டு விளையாட ஆரம்பித்து விடுவர்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஒரு சம்பவத்தைக் கூறினார்கள். அன்னார் கூறுகின்றார்கள்:

நான் ஹஜ் பயணம் மேற்கொள்வதற்காக மும்பையில் கப்பலுக்காக காத்திருந்தேன். அந்த காலத்தில் கடல்வழிப் பயணமே நடைபெற்று வந்தது. கப்பல்களில் பயணம் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

அன்னார் கூறுகின்றார்கள்: அப்போது ஒரு நண்பர் என்னிடம் கூறினார். அதாவது சில நாட்களுக்குள் முன் அவர் இரத்தினங்கள் விற்கின்ற கடைவீதியில் சென்று கொண்டிருந்தார். அவரது வைரம் கீழே விழுந்து விட்டது. ஏறக்குறைய 105 வைரங்கள் இருந்தன. அதில் சில சிறிதாகவும், சில பெரிதாகவும் இருந்தன. அவர் காவல்துறையின் தலைமையக அலுவலகத்திற்குத் தகவல் கொடுத்தார். பிறகு அவர்கள் அனைத்து Police Station றிக்கும், இவன் மீது பார்வையை வைக்குமாறும், அதனைத் தேடுமாறும் தகவல் கொடுத்தார்கள்.

பிறகு சில நாட்களுக்குப் பிறகு ஒரு நபர் Police Station ற்கு வைரங்களைக் கொண்டு வந்தார். மேலும் நான் சில குழந்தைகள் இதை வைத்து விளையாடுவதைக் கண்டேன். ஒரு சிறுவனிடம் இது பற்றி கேட்ட போது அவன், நான் இதை கோலிக்காய் என்று கருதினேன், Paper ல் மூடப்பட்டிருந்தது என்று கூறினான். எவ்வாறிருப்பினும் அவன் இதை கீழே விழுந்திருப்பதைக் கண்டு கோலிக்காய் என்று கருதினான். பிறகு குழந்தைகள் விளையாடுவதைப் போன்று விளையாட ஆரம்பித்தான். அவனிடம் மற்ற கோலிக்காய் எங்கே என்று கேட்டதற்கு அவன்,

இப்பகுதியிலுள்ள மற்ற குழந்தைகளுக்கு அதை நான் பங்கிட்டு கொடுத்து விட்டேன் என்று கூறினான். ஆனால் அது பல இலட்சத்திற்குரிய வைரங்களாகும். ஆனால் அந்த சிறுவனுக்கு அதன் மதிப்பு பற்றி என்ன தெரியும்? அவன் அதை கண்ணாடியால் ஆன கோலிக்காய் என்று கருதி விளையாட ஆரம்பித்தான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது எழுதுகின்றார்கள்: அவனது தந்தைக்கு இது கிடைத்திருந்தால் அவர் அதை மறைத்து வைத்தவாறு சுற்றித் திரிந்திருப்பார். நகரத்தை விட்டு கூட வெளியே சென்று வேறொரு நகரத்திற்கு சென்று அவர் இதனை விற்றிருப்பார். ஆனால் சிறுவனின் பார்வையில் இதற்கு எந்த மதிப்பும் இல்லாமல் இருந்தது. மேலும் இதனை அவன் கண்ணாடியினால் ஆன கோலிக்காய் என்று கருதினான். மேலும் மற்ற சிறுவர்களுக்கும் இதைப் பங்கிட்டு கொடுத்து விட்டான்.

அவனுக்கு இனிப்பு மிட்டாய் கிடைத்திருந்தால் அவன் இதை பங்கிட்டதைப் போன்று மகிழ்ச்சியாக பங்கிட்டிருக்க மாட்டான். மற்ற குழந்தைகளும் அவனிடம் இந்த வைரங்களைக் கேட்டிருப்பர். அவனும் என்னிடம் 105 கோலிக்காய் இருக்கிறது. இவை அனைத்தையும் வைத்து நான் என்ன செய்வது. நீயும் கொஞ்சம் எடுத்தும் கொள் என்று கூறி பங்கிட்டிருப்பான்.

ஆனால் அவனுக்கு இனிப்பு மிட்டாய் கிடைத்திருந்தால் பிறகு அவன் இதைப்போன்று எவருக்கும் கொடுத்திருக்க மாட்டான். மேலும் நானே இதை சாப்பிடுவேன் என்று கூறியிருப்பான். அவனது பார்வையில் இனிப்பு மிட்டாய் அதிக அதிக மதிப்பு வாய்ந்ததாக இருந்தது. மேலும் அவனது பார்வையில் எந்த அளவுக்கு இனிப்பு மிட்டாய்களுக்கு மதிப்பு இருந்ததோ அத்தகைய மதிப்பு இதற்கு இருக்கவில்லை.

இதைப் போன்று இன்னொரு கதையையும் அன்னார் கூறினார்கள்: ஒரு நபர் காட்டிற்குச் சென்று கொண்டிருந்தார். அவரது உணவு முற்றிலும் காலியாகி விட்டது. அவர் பசியினால் துடித்தார். வாழ்வதற்கான எவ்வித வழியும் அவருக்குத் தென்படவில்லை. அவருக்கு வழியில் கீழே விழுந்து கிடந்த ஒரு பை கிடைத்தது. அவர் இதில் ஏதாவது சாப்பிடுவதற்கான பொருட்கள் இருக்கும் என்று கருதியவாறு அதனை எடுத்தார். அவர் அதனை கத்தியினால் திறந்தபோது அதில் முத்துக்கள் இருந்தது தெரிய வந்தது. எனவே அவர் அதனை எறிந்து விட்டார். அந்த நேரத்தில் அவருக்கு இந்த முத்துக்களை விட கை நிறைய கடலை அல்லது ரொட்டி துண்டு மிகவும் மதிப்புமிக்கதாக இருந்தது.

ஆக ஒரு பொருளைப் பற்றிய மதிப்பு அதன் தேவை மற்றும் அதனைப் பற்றிய அறிவு இருப்பதைப் பொருத்தே இருக்கின்றது. சில மக்கள் தமது எண்ணம் மற்றும் தேவைகளுக்கேற்ப முக்கியத்துவத்தைப் பார்க்கின்றனர். சிறிய விஷயங்களைத் தேடி வெளியேறுகின்றனர். மேலும் மிகவும் முக்கியமான விஷயங்களை பொருட்படுத்துவதில்லை.

(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 20 பக்கம் 494,495 – குத்பா ஜுமுஆ 3 நவம்பர் 1939)

இந்த விஷயங்கள் உலக ஆசைகள் முழுமையாவது மற்றும் அல்லாஹ்வுடனான தொடர்பை ஏற்படுத்துவதில் போட்டு போடுதல் ஆகியவற்றிலும் நமக்கு காணக் கிடைக்கிறது. உலகிலுள்ள பெரும்பாலான மக்கள் இத்தகைய செயல்களை செய்கின்றனர். மேலும் தமது துஆக்களைக் கேட்பதற்கான முன்னுரிமையிலும் பெரும்பான்மையான மக்களிடம் சரியான ஞானம் மற்றும் அறிவு இல்லாததினால் முக்கிய விஷயங்கள் பின்னுக்குத் தள்ளி விடுகின்றனர். மேலும் மிக குறைவான முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களுக்கு மனிதன் மிக அதிகமாக தமக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதுகின்றான்.

எந்த துஆக்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு சிறந்த கருத்தை எடுத்துக் கூறியுள்ளார்கள்.

இது தொடர்பாக நான் கூறிவிடுகின்றேன். என்னிடமும் மக்கள் துஆ தொடர்பாகக் கேட்கின்றனர். அதாவது நாங்கள் துஆ செய்கின்றோம். மேலும் மிக வேதனையுடன் துஆ செய்கின்றோம். ஆனால் எங்களது துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்று கூறுகின்றனர்.

எவ்வாறிருப்பினும் நான் அவர்களுக்குப் பதில் கொடுத்து வந்துள்ளேன். இந்த வசனத்திற்கேற்ப வழங்குகின்றேன். அதைப் பற்றிய விளக்கத்தை நான் ரமலானின் முதல் குத்பாவிலும் கூறினேன். அல்லாஹ் கூறுகின்றான். நான் எனது அடியார்களுக்கு மிக அருகில் இருக்கின்றேன். அவர்களது துஆக்களை கேட்கின்றேன்.

அல்லாஹ் கூறுகின்றான்:

أُجِيبُ دَعْوَةَ الدَّاعِ إِذَا دَعَانِ فَلْيَسْتَجِيبُوا لِي وَلْيُؤْمِنُوا بِي لَعَلَّهُمْ يَرْشُدُونَ

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) இந்த வசனம் தொடர்பாக இதற்கு விளக்கம் அளித்துள்ளார்கள்:

இங்கு دَعْوَةَ الدَّاعِ என்பதில் அழைக்கக்கூடிய ஒவ்வொருவரும் என்ற பொருள் கிடையாது. மாறாக, அழைக்கின்ற குறிப்பான சிலரே ஆவர். அவர்கள் பகலில் அல்லாஹ்விற்காக நோன்பு நோற்கின்றனர். கடமையான தொழுகைகளை நிறைவேற்றுகின்றனர். இறை தியானம் செய்கின்றனர். மேலும் தமது தொழுகைகள் மற்றும் ஜுமுஆக்களை பாதுகாக்கின்றனர். மேலும் இரவில் வேதனையுடன் அல்லாஹ்வை அழைக்கின்றனர்.

எவ்வித சந்தேகமுமின்றி الدَّاعِ என்பதற்கு அழைக்கின்ற ஒவ்வொருவரும் என்ற பொருளும் இருக்கிறது. ஆனால் இங்கு ரமலான் தொடர்பாக கூறப்பட்டு வருகிறது. எனவே இங்கு எந்த மக்களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அவர்கள் தமது இறைவணக்கங்களை அல்லாஹ்விற்காகவே செய்கின்றனர். அல்லாஹ்விற்காகக் கலப்பற்றதாக ஆக்கக் கூடியவர்கள்.

பிறகு அவர்கள் தமது இறைவணக்கங்களை ரமலானிற்கு மட்டும் ஒரு எல்லைக்குட்பட்டதாக வைப்பதில்லை. மாறாக, அவர்களது இறைவணக்கங்கள் முழு வருடமும் மேற்கொள்ளப்படுகிறது. இந்த மக்கள் உலக ஆசைகளுக்காக துஆக்கள் செய்வதில்லை. மாறாக, அல்லாஹ் கிடைப்பதற்காக துஆக்கள் செய்கின்றனர்.

அல்லாஹ் கூறுகின்றான்: அவர்கள் அனைத்தையும் மறந்து எனது நெருக்கத்தைப் பெறுவதற்காக துஆ செய்கின்றனர். பிறகு நான் அவர்களது துஆக்களை கேட்கின்றேன்.

ஆக இதுவே الدَّاعِ என்பதன் பொருளாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எடுத்துக் கூறியுள்ள விளக்கம் இதுவாகும். அதாவது அல்லாஹ் கூறுகின்றான்: அவர்கள் என்னை அடைவதற்கு முயற்சி செய்கின்றனர்.

அல்லாஹ் கூறுகின்றான்: وَإِذَا سَأَلَكَ عِبَادِي عَنِّي அதாவது நான் எங்கு இருக்கின்றேன்? என்று என்னைப் பற்றி அவர்கள் கேள்வி கேட்கின்றனர். அவர்கள் என்னை அடைய விரும்புகின்றனர். அவர்கள் ரொட்டியைப் பற்றி கேள்வி கேட்பதில்லை. வேறு ஏதோ

உலக ஆசைகள் குறித்து அவர்கள் கேள்வி கேட்பதில்லை. அவர்கள், அல்லாஹ் எங்கு இருக்கின்றான்? நாங்கள் அல்லாஹ்வை சந்திக்க வேண்டும் என்று கேள்வி கேட்கின்றனர்.

ஆக அல்லாஹ் கூறுகின்றான்: அவர்கள் என்னைச் சந்திப்பதற்கு நிம்மதியிழந்தவர்களாக இருக்கின்றனர். அவர்களை நான் நிச்சயமாக சந்திப்பேன்.

அல்லாஹ் எவர்கள் வேலையைப் பற்றியோ, அல்லது ரொட்டியைப் பற்றியோ, அல்லது செல்வத்தைப் பற்றியோ அல்லது உறவைப் பற்றியே கேட்டால் நான் அவரது கூற்றை நிச்சயமாக கேட்கின்றேன் என்று கூறவில்லை.

பொதுவாக நாம் பார்ப்பது என்னவென்றால், இந்த விஷயங்களைக் கேட்கக் கூடியவர்களும் இதையே கூறுகின்றனர். அதாவது நாங்கள் மிகவும் வேதனையுடன் துஆக்கள் செய்தோம். ஆனால் எங்களது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இந்த விஷயங்களைக் கேட்பவர்கள் தற்காலிகமாக இறைவணக்கத்தை செய்யக்கூடியவர்களாக இருக்கின்றனர்.

தமது இறைவணக்கம் மற்றும் தொழுகை மற்றும் துஆக்களில் எப்போது வரை அவர்களுக்கு ஒரு பணியின் தேவை இருக்கிறதோ அந்த நேரம் வரை தான் கவனம் செலுத்துகின்றனர். அவர்களது அந்த வேதனையுடன் கேட்கப்படுகின்ற நிலைமை தற்காலிகமானதாகும்.

சிலர் எழுதுகின்றனர்: அதாவது நாங்கள் எவ்வளவு வேதனையுடன் துஆக்கள் செய்தோம். ஆனால் அல்லாஹ் செவியேற்கவில்லை.

அல்லாஹ் நான் உங்களது உலக ஆசைகளை முழுமை செய்வேன். மேலும் துஆக்களை கேட்பேன் என்று கூறவில்லை. ஆனால் உண்மையான மாற்றங்களை ஏற்படுத்தியவாறு அல்லாஹ்வை அடைவதற்கும், அவனை சந்திப்பதற்கும் வேதனையுடன் நாம் துஆ செய்தால் பிறகு அல்லாஹ், நான் நிச்சயமாக கேட்பேன். பிறகு எனது நண்பருக்கு நான் நண்பனாகி அவனுடன் நான் நிற்பேன். அவனது விருப்பங்களை முழுமை செய்வேன். அவனது எதிரியுடன் நான் சண்டையிடுவேன் என்று கூறுகின்றான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: சில கருத்துக்கள் வார்த்தைகளினால் வெளிப்படுவதில்லை. மாறாக அந்த வாக்கியங்களில் அது மறைந்து இருக்கின்றது. இத்தகைய நிலையே இங்கு உள்ளது. இங்கு அத்தாயி என்பதன் பொருள் அழைக்கக்கூடிய ஒவ்வொருவரும் என்பது பொருளல்ல. மாறாக, இறைவனை அழைக்கக் கூடியவர்.

அல்லாஹ் கூறுகின்றான்: எனது அடியார்கள் என்னை நோக்கி ஓடிவரும்போது அவர்களிடம் ஒரு துடிப்பும், அன்பும் உருவாகின்றது. மேலும் அவர்கள் எனது இறைவன் எங்கே இருக்கின்றான்? என்று கேட்கின்றனர். நீர் அவர்களிடம் கூறுவீராக: நான் அழைக்கக்கூடியவரின் அழைப்பை நிராகரிப்பதில்லை. மேலும் நிச்சயமாக அவரது துஆவைக் கேட்கின்றேன்.

**(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 20 பக்கம் 500,501 – குத்பா ஜுமுஆ 3 நவம்பர் 1939)**

உலக விஷயங்களுக்காக மக்கள் துஆ செய்கின்றனர். எந்த துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லையோ பிறகு அவர்கள் அதனால் அல்லாஹ்வின் மீது அவநம்பிக்கை கொண்டு விடுகின்றனர்.

உதாரணமாக, வேலை தேடுகின்றனர். உதாரணமாக, அதிகமான விண்ணப்பங்கள் கொடுக்கக் கூடியவர்கள் இருப்பர். ஒரு நபரை விட இன்னொரு நபர் தகுதிவாய்ந்தவராக இருக்கலாம். அவருக்கு வேலை கிடைக்கும். எவராவது ஒருவர் நான் மிகவும் வேதனையுடன் துஆ செய்தேன் என்று கூறினால், மற்றவர் இவரை விட அதிகமாக வேதனையுடன் துஆ செய்திருக்கலாம். இதன் காரணமாக அவருக்கு வேலை கிடைத்திருக்கும். மேலும் இவ்வாறே மற்ற உலக விவகாரங்களும் இருக்கின்றன.

ஒரு வேலை இருக்கலாம். அல்லது இரண்டு இருக்கலாம். இதே போன்று உலக விஷயங்கள் ஒரு எல்லைக்குட்பட்டதாகவே இருக்கிறது. ஒன்று, இரண்டு அல்லது சிறிதளவு இருக்கலாம். ஆனால் அல்லாஹ் ஒரு எல்லைக்குட்பட்டவன் அல்ல. அவனுக்கு எந்த வரையறையும் கிடையாது. நாம் இறைவனைக் கேட்போம் என்றால் இறைவனிடமிருந்து ஒவ்வொருவருக்கும் கிடைக்கும். ஆனால் நிபந்தனை என்னவென்றால், வேதனையும் இருக்க வேண்டும். அல்லாஹ்வுடைய கட்டளைகளின்படி செயல்படவும் வேண்டும்.

அல்லாஹ்வும் இதையே கூறுகின்றான்: நீங்களும் நான் கூறுவதை கேளுங்கள். அல்லாஹ்வின் உயர் அந்தஸ்திற்கு கண்ணியம் வழங்குங்கள். வைரத்தை அடையாளங்கண்டு கொள்ளுங்கள். கண்ணாடி கோலிக்காயைப் போன்று அதனைக் கருதாதீர்கள். இவ்வாறு நடைபெறும் என்றால் பிறகு அல்லாஹ் கிடைத்து விடுகின்றான். பிறகு எவருக்கு அல்லாஹ் கிடைத்து விடுவானோ அவரது காலடிக்கு கீழ் உலகத்தின் ஒவ்வொரு அருட்களும் வந்து விடுகின்றன.

எனவே அடியானின் பணி என்னவென்றால், அல்லாஹ்வின் ஒவ்வொரு கூற்றையும் கேட்க வேண்டும். வருடத்தின் ஒரு மாதத்தை மட்டும் இறைவணக்கத்திற்காக போதுமானதாகக் கருதாதீர்கள். ரமலானின் இறுதி ஜுமுஆவை மட்டும் துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் வழியாகக் கருதாதீர்கள்.

நாம் அல்லாஹ்வின் மீது முழுமையான நம்பிக்கை வைத்தால், மேலும் அல்லாஹ்வை ஒருபோதும் ஏமாற்றவில்லை என்றால் பிறகு உண்மையில் நாம் நேர்வழி பெற்றவர்களாக இருப்போம். அவர்களைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான்: அவர்களது நண்பனாக அல்லாஹ் இருப்பான். மேலும் அவனது அனைத்துத் தேவைகளையும் முழுமை செய்கின்றான். இதுவே அல்லாஹ்வின் வாக்குறுதியாகும்.

ஆக நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளோம். நமது பொறுப்பு என்னவென்றால், நாம் நமது இறைவணக்கத்தின் தரத்தை உயர்த்த வேண்டும். எந்த தரம் வரை இந்த ரமலான் மாதத்தில் சென்றோமோ அல்லது செல்வதற்கு முயற்சி செய்தோமோ அதற்குக் கீழே தம்மை விழச் செய்து விடாதீர்கள். மேலும் தமது தொழுகையின் தரத்தையும் உயர்த்திக் கொண்டே செல்லுங்கள். மேலும் ஜுமுஆவில் கலந்து கொள்வதையும் நிலைநாட்டுங்கள். அல்லாஹ்வின் கட்டளைகளை கேட்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

மேலும் எந்த மக்கள் அல்லாஹ்வை கேட்கக் கூடியவர்களாக இருப்பார்களோ அந்த மக்களில் இணைவதற்கு நாம் எப்போதும் முயற்சி செய்து வர வேண்டும். அதாவது நமக்கு அல்லாஹ் கிடைக்க வேண்டும் என்ற இந்த துஆவை எப்போதும் செய்து வர வேண்டும். நமது தொழுகைகள், நமது இறைவணக்கங்கள் இறை நெருக்கத்தை பெற்றுத் தரக்கூடிய தொழுகைகளாகவும், இறைவணக்கங்களாகவும் இருக்க வேண்டும். அல்லாஹ் நமக்கு இந்த தரத்தை அடைவதற்கான நற்பாக்கியத்தை வழங்குவானாக.

# ஜுமுஆ பேருரை

**ஸைதே! நீர் எனது நண்பராவீர். மேலும் நீர் எனக்கு அனைத்து மக்களையும் விட மிகவும் அன்பிற்குரியவராவீர்**

**நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே! நான் உங்களை விட வேறு எவருக்கும் ஒருபோதும் முன்னுரிமை வழங்க மாட்டேன்**

**எந்த அன்பையும், கலப்பற்றத் தன்மையையும் நான் பெருமானார் (ஸல்) அவர்களிடம் கண்டேனோ அதன் காரணமாக அன்னார் (ஸல்) அவர்கள் அனைவரையும் விட எனக்கு மிகவும் அன்பிற்குரியவர் ஆவார்கள்**

**அர்ப்பணிப்பு மற்றும் கலப்பற்றத் தன்மையில் தம்மையே மாய்த்துக் கொண்ட பத்ர் போரில் பங்கு பெற்ற நபி (ஸல்) அவர்களின் சஹாபாக்களான ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் (ரலி), ஹஸ்ரத் ஆகில் பின் பகீர் (ரலி), ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) ஆகியோரைப் பற்றிய அருளுக்குரிய நற்குறிப்பு**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாயிலில் 07 ஜுன் 2019** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1398 -ஆம் ஆண்டு **இஹ்ஸான்** மாதம் **07 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّيْنَ

இன்று நான் எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபாக்களின் நற்குறிப்பில் முதலாவது சஹாபி ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் ஆகும். அன்னார் பத்ர் போரில் பங்கு பெற்றிருந்தார்கள் என அல்லாமா சஹரி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். உர்வா அவர்கள் அன்னாரது பெயரை அப்துல்லாஹ் பின் தாரிக் பல்வி என்று எழுதியுள்ளார்கள். அன்னார் அன்ஸாரிகளின் நட்புக் கோத்திரத்தை சார்ந்தவர்களாக இருந்தார்கள். சிலர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் பல்வி அவர்களைக் குறித்து அன்னார் அன்ஸாரிகளின் நட்புக் கோத்திரத்தைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள் என்று குறிப்பிடுகின்றனர். இப்னு ஹிஷாம் அவர்கள் அன்னாரைக் குறித்து அன்னார் பலீஹ் கோத்திரத்தைச் சார்ந்தவர் என்று குறிப்பிட்டுள்ளார்கள். ஹஸ்ரத் மஆத்திப் (ரலி) மற்றும் அப்துல்லாஹ் பின் தாரிக் ஆகிய இருவரும் சகோதர்கள் ஆவர். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் அவர்களின் தாயார் பனு உஸ்ஸாக் கோத்திரத்தின் கிளையான பனு காஹித் கோத்திரத்தைச் சார்ந்தவர் ஆவார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் மற்றும் முஆத்திப் பின் உபைதா ஆகிய இருவரும் பத்ர் மற்றும் உஹது போர்களில் கலந்து கொண்டார்கள். மேலும் ரஜீஹ் போரின்போது இருவருக்கும் உயிர்த்தியாகம் செய்யும் நற்பேறு கிடைத்தது. ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் அவர்கள் குறிப்பிட்ட ஆறு சஹாபாக்களில் ஒருவர் ஆவார்கள். அல்லது புகாரியின் அறிவிப்பு உட்பட வேறு சில அறிவிப்புகளின் அடிப்படையில் அந்த குறிப்பிட்ட சஹாபாக்களின் எண்ணிக்கை 10 என்று கூறப்படுகிறது. அன்னார் அந்த 10 சஹாபாக்களில் ஒருவர் ஆவார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 3 ஆம் ஆண்டின் இறுதியில் உஸைல் மற்றும் காரா கோத்திரத்தைச் சேர்ந்த சில நபர்களுடன் 7 சஹாபாக்களை அனுப்பி வைத்தார்கள். அந்த கோத்திரத்தின் மக்கள் மார்க்கத்தைக் குறித்து அறிந்து கொள்ளவும், திருக்குர்ஆன் மற்றும் இஸ்லாமிய மார்க்கத்தைக் கற்றுக் கொடுக்கவும் ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த சஹாபாக்களை அவர்களுடன் அனுப்பி வைத்தார்கள். அந்த சஹாபாக்கள் ரஜீஹ் என்ற இடத்தை அடைந்தனர். அங்கு ஒரு நீரூற்று இருந்தது. அது உஸைல் கோத்திரத்திற்கு சொந்தமானதாக இருந்தது. அந்த இடத்தில் வரம்பு மீறியவாறு நிராகரிப்பாளர்கள் முஸ்லிம்களைச் சுற்றி வளைத்தனர். கிளர்ச்சி செய்தவாறு அவர்கள் சஹாபாக்களுடன் போர் புரிந்தனர். அந்த 7 சஹாபாக்களின் பெயர் இவ்வாறாகும். ஹஸ்ரத் ஆஸிம் பின் ஸாபித், ஹஸ்ரத் முர்ஷத் பின் அபூ மரீஸ், ஹஸ்ரத் குபைப் பின் அதீ, ஹஸ்ரத் காலித் பின் பகீர், ஹஸ்ரத் ஸைது பின் தஸ்னா, ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக், ஹஸ்ரத் முஅத்திப் பின் ஸாஹிப் ஆகியோர் ஆவர்.

இவர்களில் ஹஸ்ரத் முர்ஷத், ஹஸ்ரத் காலித் மற்றும் ஹஸ்ரத் ஆஸிம், ஹஸ்ரத் முஅத்திப் பின் ஸாஹிப் ஆகியோர் சம்பவம் நடந்த இடத்திலேயே ஷஹீதாகி விட்டனர். ஹஸ்ரத் குபைப் மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் மற்றும் ஹஸ்ரத் ஸைது ஆகியோர் ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டனர். அப்போது நிராகரிப்பாளர்கள் அவர்களைக் கைது செய்தனர். அவர்களை மக்கா நோக்கி அழைத்துச் செல்லத் தொடங்கினர்.

மக்காவிலிருந்து 5 மைல் தொலைவிலுள்ள ஸுஹ்ரான் என்ற பள்ளத்தாக்கை அவர்கள் வந்தடைந்தபோது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் அவர்கள் தாம் கட்டப்பட்ட கயிற்றிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டார்கள். மேலும் கைகளில் வாள் ஏந்தி நின்றார்கள். இந்த நிலையைக் கண்டதும் இணை வைப்பவர்கள் பின் வாங்கினர். மேலும் அன்னார் மீது கற்களை வீசத் தொடங்கினர். எந்த அளவுக்கு என்றால் அங்கேயே அன்னார் ஷஹீதாகி விட்டார்கள். அன்னாரின் கபர் ஸுஹ்ரான் என்ற இடத்தில் உள்ளது. ரஜீஹ் சம்பவம் ஹிஸ்ரத்திற்குப் பிறகு 36 வது மாதத்தில் இஸ்லாமிய மாதமான ஸஃபர் மாதத்தில் நிகழ்ந்தது.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 464 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 284,285 அப்துல்லாஹ் பின் தாரிக் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 347 அப்துல்லாஹ் பின் தாரிக் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & ஸஹீஹுல் புகாரி, கிதாபுல் ஜிஹாது... ஹதீஸ் எண் 3045 & மஜ்மவுல் பல்தான் தொகுதி 4 பக்கம் 247 – பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஹஸ்ஸாம் அவர்கள் இந்த சம்பவத்தைப் பற்றி நினைவு கூர்ந்தவாறு தமது கவிதைகளில் இவ்வாறு எடுத்துரைக்கின்றார்:

وَابْنُ الدَّثِنَةِ وَابْنُ طَارِقٍ مِنْهُمْ وَافَاهُ ثَمَّ حِمَامُهُ الْمَكْتُوْبُ

صَلَّى الْإِلٰهُ عَلَى الَّذِيْنَ تَتَابَعُوْا يَوْمَ الرَّجِيْعِ فَأُكْرِمُوْا وَأُثِيْبُوْا

இந்த கவிதைகளின் பொருள் இவ்வாறாகும். ஹஸ்ரத் இப்னு தஸ்னா மற்றும் ஹஸ்ரத் இப்னு தாரிக் ஆகியோர் எப்படிப்பட்ட நபர்கள் என்றால் அவர்களுக்கு மரணம் விதிக்கப்பட்ட இடத்தில் அவர்களுக்கு மரணம் வந்தது. வணக்கதிற்குரிய இறைவன் அவர்கள் மீது கருணையை இறக்கினான். ரஜீஹ் என்ற இடத்தில் அவர்கள் ஷஹீதாகினர்.எனவே

அவர்களுக்கு கண்ணியம் வழங்கப்பட்டது. மேலும் அவர்களுக்கு நற்கூலியும் வழங்கப்பட்டது.

(அல் இஸ்திஆப் தொகுதி 3 பக்கம் 928,929 அப்துல்லாஹ் பின் தாரிக் (ரலி) – 1992 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் ஜைலில் அச்சிடப்பட்டது)

ரஜீஹ் சம்பவத்தைக் குறித்து நான் இதற்கு முன்பும் ஏனைய சஹாபாக்களின் நற்குறிப்பிலும் கூறியுள்ளேன். இங்கும் நான் சிலவற்றை கூறியுள்ளேன். இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் விரிவாக ஒரு புத்தகத்தில் எழுதியுள்ளார்கள். அதன் சுருக்கத்தை நான் இப்போது எடுத்துரைக்கின்றேன்.

நிராகரிப்பாளர்களின் தாக்குதல் மற்றும் சதித் திட்டங்களைப் பற்றிய அபாயகரமான செய்திகள் ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு நாலா புறமிருந்தும் வந்து கொண்டிருந்தன. உஹது போரின் காரணமாக நிராகரிப்பாளர்களுக்கு தைரியம் அதிகரித்திருந்தது. அவர்களிடமிருந்து அதிக ஆபத்து உணரப்பட்டது. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 4 ஆம் ஆண்டு இஸ்லாமிய மாதமான சஃபர் மாதத்தில் 10 நபர்களைக் கொண்ட தமது ஒரு குழுவை ஆயத்தம் செய்தார்கள். மேலும் அதற்கு ஆஸிம் அவர்கள் அமீராக நியமித்திருந்தார்கள். அவர்கள் இரகசியமாக மக்காவிற்கு அருகில் சென்று குரைஷிகளின் நிலையை அறிய வேண்டும் என்றும், மேலும் குரைஷிகளின் திட்டங்களைப் பற்றி அறிந்து, அவர்களின் நடவடிக்கையையும் பற்றி அறிந்து தமக்குத் தகவல் தருமாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த 10 சஹாபாக்களுக்கு கட்டளையிட்டிருந்தார்கள்.

ஆனால் அக்குழு அப்போது மதீனாவிலிருந்து புறப்பட்டிருக்கவில்லை. அதற்குள் உஸைல் மற்றும் காரா கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். மேலும் தங்களது கோத்திரத்தைச் சேர்ந்த ஏராளமான நபர்கள் இஸ்லாத்தின் பக்கம் ஈர்க்கப்பட்டுள்ளனர். எனவே எங்களுடன் நீங்கள் சிலரை அனுப்பி வையுங்கள். அவர்கள் எங்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி எடுத்துக் கூறட்டும். மேலும் இஸ்லாமிய போதனைகளையும் அவர்கள் எங்களுக்குக் கற்றுத் தரட்டும். அதன் மூலம் நாங்கள் முஸ்லிமாகி விடுவோம் என்று அவர்கள் கூறினர்.

பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த கோத்திரத்தைச் சார்ந்தவர்களின் விருப்பத்தை அறிந்திருந்தார்கள். எனவே மக்காவிற்குச் சென்று செய்தி சேகரித்து வர ஆயத்தம் செய்து வைத்திருந்த அந்த குழுவை மக்காவிற்கு அனுப்புவதற்கு பகரமாக இந்த நபர்களுடன் அனுப்பி வைத்தார்கள். ஆனால் அந்த நபர்கள் பொய்யர்கள் என பின்னர் தெரிய வந்தது. பனு லஹ்யானால் தூண்டப்பட்டு அந்த நபர்கள் மதீனாவிற்கு வந்திருந்தனர்.

அவர்கள் தமது கோத்திரத்தின் தலைவனான சஃப்யானின் கொலைக்குப் பழிவாங்குவதற்காக பொய் கூறி சில முஸ்லிம்களை மதீனாவிலிருந்து அழைத்துச் சென்று அவர்கள் மீது தாக்குதல் தொடுக்க திட்டம் தீட்டியிருந்தனர். பனு லஹ்யான் இந்த வேலைக்குப் பகரமாக உஸைல் மற்றும் காரா கோத்திரத்தைச் சார்ந்த அந்த மக்களுக்கு ஏராளமான ஒட்டகங்களை அன்பளிப்பாக வழங்குவதாக அறிவித்திருந்தது.

உஸைல் மற்றும் காரா கோத்திரத்தைச் சார்ந்த இந்த நம்பிக்கைத் துரோகிகள் அஸ்ஃபான் மற்றும் மக்காவிற்கு இடையேயுள்ள ஓர் இடத்தை அடைந்தபோது பனு லஹ்யான் கோத்திரத்தைச் சார்ந்தவர்களுக்கு எங்களுடன் முஸ்லிம்கள் வந்து கொண்டிருக்கின்றனர்; நீங்கள் பழிவாங்க வாருங்கள் என அவர்களுக்கு இரகசியமாகத் தகவல் கொடுத்து அனுப்பினர். எனவே பனு லஹ்யான் கோத்திரத்தைச் சார்ந்த 200 பேர் வந்தனர். அவர்களில் 100 பேர் அம்பு எய்யும் நபர்களாக இருந்தனர். முஸ்லிம்களை சிறை பிடிப்பதற்கு அவர்கள் புறப்பட்டனர். அதாவது அவர்களுக்கு தகவல் கிடைத்ததும் அங்கு வந்து சேர்ந்தனர். ரஜீஃ என்ற இடத்தில் இரு தரப்பும் ஒருவரையொருவர் சந்தித்தனர். முஸ்லிம்கள் 10 நபர்களே இருந்தனர். சில அறிவிப்புகளில் 7 நபர்கள் என்றே வந்துள்ளது. ஆயுதம் ஏந்திய 200 நபர்களைக் கொண்ட அந்த நிராகரிப்பாளர்களை இவர்கள் எவ்வாறு எதிர்கொள்ள முடியும்?

ஆயினும் முஸ்லிம்கள் ஈமானின் உணர்வினால் நிரம்பி இருந்தனர். சரணடைவது என்பது அவர்களது இயல்பிலேயே இல்லாமல் இருந்தது. எனவே அவர்கள் அருகில் இருந்த ஒரு குன்றின் மீது ஏறிவிட்டனர். அதன் மூலம் எதிரிகளை எதிர் கொள்ள ஆயத்தமாகி விடலாம் என்பது அவர்களின் செயல் திட்டமாக இருந்தது. நிராகரிப்பாளர்கள் ஏமாற்றுவது தமக்கு ஆகுமானது என்று கருதி வந்தனர். எனவே நீங்கள் இறங்கி வாருங்கள். உங்களைக் கொலை செய்ய மாட்டோம் என்று வாக்குறுதி தருவதாக உரத்த குரலில் சப்தமிட்டனர்.

அதற்கு இந்த சஹாபாக்கள், உங்களது வாக்குறுதி மற்றும் உறுதிமொழியின் மீது எங்களுக்கு எந்த நம்பிக்கையும் கிடையாது. உங்களது வாக்குறுதியை நம்பி நாங்கள் கீழே வர முடியாது என்று ஹஸ்ரத் ஆஸிம் அவர்கள் உரத்த குரலில் பதிலளித்தார்கள். பின்னர் ஹஸ்ரத் ஆஸிம் அவர்கள் வானத்தை நோக்கி முகம் திருப்பியவாறு, இறைவா! நீ எங்கள் நிலையை பார்த்துக் கொண்டிருக்கின்றாய். நீ உனது தூதருக்கு எங்களது நிலையைப் பற்றி தகவல் கொடுத்து விடு என்று கூறினார்கள். எவ்வாறிருப்பினும் ஆஸிம் மற்றும் அவரது குழுவினர் அவர்களை எதிர்த்துப் போரிட்டார்கள். சண்டையிட்டு இறுதியில் ஷஹீதானார்கள். 7 சஹாபாக்கள் ஷஹீதாக்கப்பட்டபோது ஹஸ்ரத் குபைப் பின் அதீ, ஸைது பின் தஸ்னா மற்றும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் மட்டுமே எஞ்சியிருந்தனர். நிராகரிப்பாளர்களின் அசல் நோக்கம், அவர்களைப் பிடிக்க வேண்டும் என்பதாகவே இருந்தது.

எனவே அவர்கள் அந்த சஹாபாக்களைப் பார்த்து, இப்போது நீங்கள் கீழே இறங்கி வாருங்கள். நாங்கள் உங்களை ஒன்றும் செய்ய மாட்டோம் என்று அவர்கள் வாக்குறுதி வழங்கினர். இம்முறை அவர்களின் வாக்குறுதியை சஹாபாக்கள் நம்பினர். அவர்களின் வலையில் சிக்கி கீழே இறங்கி வந்து விட்டனர். கீழே இறங்கி வந்ததும் நிராகரிப்பாளர்கள் அவர்களை அம்புகளால் சிறை பிடித்து கயிற்றால் கட்டினர். அப்துல்லாஹ் பின் தாரிக், ஸைது மற்றும் குபைப் ஆகியோர் அந்த சஹாபாக்களாக இருந்தனர். இவர்களில் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் அவர்களால் நிராகரிப்பவர்களின் செயலைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

இது உங்களின் உடன்படிக்கையின் மீறலாகும். இப்போதே நீங்கள் எங்களுடன் இவ்வாறு நடக்கும்போது இனி நீங்கள் எங்களுடன் எவ்வாறு நடந்து கொள்வீர்கள்? என்பது எங்களுக்குத் தெரியாது என ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் அவர்கள் உரத்த குரலில் சப்தமிட்டார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் அவர்கள் நிராகரிப்பவர்களுடன் செல்ல மறுத்து விட்டார்கள். எனவே நிராகரிப்பாளர்கள் சிறிது தூரம் அன்னாரை இழுத்துக் கொண்டே சென்றார்கள். பின்னர் அன்னாரைக் கொலை செய்து அங்கேயே வீசி விட்டனர். அவர்களின் பழிவாங்குதல் அப்போது நிறைவேறி இருந்தது. இனி அவர்கள் குரைஷிகளை மகிழ்விக்க விரும்பினர்.

அறிவிப்பில் வருகிறது: அவர்கள் மூன்று நபர்களைக் கொண்டு சென்றனர். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் அவர்கள் கட்டப்பட்டிருந்த கயிற்றிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு எதிரிகளுடன் சண்டையிடுவதற்கு ஆயத்தமானார்கள். எனவே நிராகரிப்பாளர்கள் அன்னாரைக் கல்லெறிந்து ஷஹீதாக்கினர். மேலும் அங்கேயே அவர்கள் வீசி விட்டு சென்று விட்டனர். பழிவாங்கும் எண்ணம் நிறைவேறி விட்டதால் எஞ்சியிருந்த குபைப் மற்றும் ஸைது ஆகியோரை பணத்தின் மீது கொண்ட பேராசையால் மக்கா நோக்கி அழைத்துச் சென்றனர். அங்கு சென்றதும் குரைஷிகளிடம் இவர்களை விற்று விட்டனர். ஆக

ஹாரிஸ் பின் ஆமிர் பின் நஃபல் என்பவரின் மகன்கள் குபைப் அவர்களை விலைக்கு வாங்கினர். ஏனெனில் குபைப் அவர்கள் பத்ர் போரில் ஹாரிஸை கொலை செய்திருந்தார்கள். மேலும் சஃப்வான் பின் உமைய்யா ஸைது அவர்களை விலைக்கு வாங்கினார்.

ஹஸ்ரத் குபைப் அவர்களைப் பற்றி அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: அதாவது எந்த நிராகரிப்பாளரின் வீட்டில் அன்னாரை கைதியாக இருந்தார்களோ அந்த வீட்டின் குழந்தை ஒன்று விளையாடிக் கொண்டிருந்தது. அந்தக் குழந்தை விளையாடியவாறு அன்னாருக்கு அருகில் வந்தது. அப்போது குபைப் அவர்கள் அந்தக் குழந்தையை தமது மடியில் தூக்கி வைத்துக் கொண்டார்கள். அக்குழந்தையின் தாய் இதனைக் கண்டு மிகவும் பதற்றமடைந்தாள். ஏனென்றால் அப்போது அன்னாரது கைகளில் கத்தி ஒன்று இருந்தது.

இருப்பினும், அன்னார் அந்தப் பெண்ணிடம், நீங்கள் அஞ்ச வேண்டாம் என ஹஸ்ரத் குபைப் அவர்கள் கூறினார்கள். அன்னாரது கரங்களில் கத்தி இருந்ததினால்தான் அந்தப் பெண் அஞ்சிக் கொண்டிருந்தாள். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் அவர்கள் ரஜீஃ சம்பவத்தில் இவ்வாறு ஷஹீதாக்கப்பட்டார்கள். அதாவது அன்னார் நிராகரிப்பாளர்களுடன் செல்ல மறுத்து அங்கேயே சண்டையிட்டு ஷஹீதானார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 513–515)

அடுத்து இரண்டாவது நான் எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் ஆகில் பின் பகீர் ஆகும். ஹஸ்ரத் ஆகில் அவர்கள் பனு சஅது பின் கைஸ் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள்.

(சீரத் இப்னு ஹிஷாம் பக்கம் 462,463 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஆகில் அவர்களின் முந்தைய பெயர் காஃபில் ஆகும். ஆனால் அன்னார் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு ஆகில் என பெயர் சூட்டினார்கள். அன்னாரது தந்தையின் பெயர் பெரும்பாலான வரலாற்று நூல்களில் பகீர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் சில நூல்களில் அபூ பகீர் என்று எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ஆகில், ஹஸ்ரத் ஆமிர், ஹஸ்ரத் அயாஸ் மற்றும் ஹஸ்ரத் காலித் ஆகிய இந்த நான்கு சகோதரர்களும் பகீரின் மகன்களாவர். இவர்களை அனைவரும் ஒன்றாக தாரே அர்கமில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர். இவர்கள் அனைவரும் முதன் முதலில் தாரே அர்கமில் இஸ்லாத்தைத் தழுவினர். ஹஸ்ரத் ஆகில், ஹஸ்ரத் ஆமிர், ஹஸ்ரத் அயாஸ் மற்றும் ஹஸ்ரத் காலித் ஆகியோர் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்ய புறப்பட்டனர். மேலும் தமது குடும்பத்தின் அனைத்து ஆண்கள் மற்றும் பெண்கள் அனைவரையும் ஒன்று கூட்டி ஹிஜ்ரத் செய்தனர். அனைத்து ஆண்களும், பெண்களும் ஒன்றாக ஹிஜ்ரத் செய்தனர். இவ்வாறு மக்காவில் அன்னாரின் வீடுகளில் எவரும் பின்தங்கி இருக்கவில்லை. எந்த அளவுக்கு என்றால் அவர்களின் வீட்டுக் கதவுகள் பூட்டப்பட்டிருந்தன. இவர்கள் அனைவரும் ரஃபா பின் அப்துல் மன்ஸர் என்பவரது வீட்டில் வந்து தங்கினர்.

ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆகில் மற்றும் ஹஸ்ரத் முபஷ்ஷிர் ஆகிய இருவருக்குமிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். சகோதரத்துவத்தையும் நிலைநாட்டினார்கள். இவர்கள் இருவரும் பத்ர் போரில் ஷஹீதானார்கள்.

இன்னொரு அறிவிப்பிற்கேற்ப பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஆகில் மற்றும் ஹஸ்ரத் முஜஸ்ஸிர் பின் அயாஸ் ஆகிய இருவருக்குமிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள் என்று வந்துள்ளது.

ஹஸ்ரத் ஆகில் அவர்கள் தமது 34 வது வயதில் பத்ர் போரில் ஷஹீதானார்கள். அன்னாரை மாலிக் பின் ஜெஹுர் ஜோஷ்மி என்பவன் ஷஹீதாக்கினான்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 113 ஆகில் பின் அபீ அல்பகீர் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது & அல் அஸாபா தொகுதி 3 பக்கம் 466 ஆகில் பின் அல்பகீர் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அயாஸ் மற்றும் அவர்களது சகோதரர்களான ஹஸ்ரத் ஆகில், ஹஸ்ரத் காலித் மற்றும் ஹஸ்ரத் ஆமிர் ஆகியோரைத் தவிர பத்ர் போரில் வேறு எந்த சகோதரர்களும் ஒன்றாக கலந்து கொண்டதை நாங்கள் காணவில்லை என இப்னு இஸ்ஹாக் அவர்கள் கூறுகின்றார்கள்.

(அல் அஸாபா தொகுதி 1 பக்கம் 310 அயாஸ் பின் அல்பகீர் – 2005 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஸைது பின் அஸ்லம் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அபூ பகீரின் மகன்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எங்களின் சகோதரிக்கு இந்த நபருடன் திருமணம் நடத்தி வையுங்கள் என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், பிலால் அவர்களைப் பற்றி உங்களது எண்ணம் என்ன? என்று கேட்டார்கள். அதாவது இந்த நான்கு சகோதரர்களும் அல்லது இவர்களில் சிலர் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் வந்து தமது சகோதரியின் திருமணத்தைப் பற்றி பெருமானார் (ஸல்) அவர்களிடம் பேசினர். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் பிலால் அவர்களுடன் திருமணம் நடத்தி வைப்பதைப் பற்றி அவர்களிடம் கேட்டார்கள். ஆனால் அதில் அவர்களுக்கு திருப்தி ஏற்படவில்லை. எனவே அவர்கள் திரும்பிச் சென்று விட்டார்கள்.

இரண்டாவது முறையாக பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் அவர்கள் மீண்டும் வந்து, அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்களது சகோதரிக்கு இந்த நபருடன் நீங்கள் திருமணம் நடத்தி வையுங்கள் என்று கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மீண்டும் அவர்களிடம், பிலாலைப் பற்றி உங்களது எண்ணம் என்ன? என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் எந்த பதிலும் அளிக்காமல் திரும்பிச் சென்று விட்டார்கள். பின்னர் மூன்றாவது முறையாக இவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் மீண்டும் வந்தார்கள். மீண்டும் பெருமானார் (ஸல்) அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! எங்கள் சகோதரிக்கு இந்த நபருடன் நீங்கள் திருமணம் நடத்தி வையுங்கள் என்று கூறினார்கள்.

அப்போதும் பெருமானார் (ஸல்) அவர்கள், பிலால் அவர்களைப் பற்றி உங்களது எண்ணம் என்ன? என்று கேட்டார்கள். மேலும் சுவர்க்கவாசியைப் பற்றி உங்கள் எண்ணம் என்ன? என்றும் கேட்டார்கள். அதற்கு அவர்கள், ஹஸ்ரத் பிலால் அவர்களுடன் தமது சகோதரியின் திருமணத்தை நடத்த சம்மதம் தெரிவித்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 126 பிலால் பின் ரிபாஹ் – 1996 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தார் அஹ்யாவுத் தராஸில் அச்சிடப்பட்டது)

அடுத்து நான் எடுத்துக் கூற இருக்கின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா ஆகும். அன்னாரின் தந்தையின் பெயர் ஹாரிஸா பின் ஷர்கீல் ஆகும். மேலும் ஹாரிஸ் பின் ஷர்ஹபீல் என்றும் கூறப்படுகிறது. அன்னாரது தாயாரின் பெயர் சவ்தா பின்த் சஃபா ஆகும். ஹஸ்ரத் ஸைது பனு கஸாஆ கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். அந்தக் கோத்திரம் யமன் நாட்டில் மிகவும் கண்ணியமிக்க கோத்திரமாக இருந்தது. ஹஸ்ரத் ஸைது அவர்கள் சிறிய குழந்தையாக இருந்தபோது அன்னாரது தாய் அவர்கள் அன்னரைத் தூக்கிக் கொண்டு தமது தாய் வீட்டிற்குச் சென்றார்கள். பனு கீம் என்ற இடத்தை

அவர்கள் கடந்து சென்றார்கள். பயணத்தின் போது அவர்கள் ஓரிடத்தில் தங்கினார்கள். ஹஸ்ரத் ஸைது அவர்கள் அப்போது சிறு குழந்தையாக இருந்தார்கள். கூடாரத்திற்கு அருகே நின்று கொண்டிருந்தார்கள். நின்று கொண்டிருந்த அவர்களை கொள்ளையர்கள் அடிமையாக ஆக்கிக் கொண்டு அவ்காஸ் என்ற கடைவீதியில் ஹகீம் என்பவரிடத்தில் 400 தர்ஹம் பெற்றுக் கொண்டு விற்று விட்டார்கள். ஹகீம் அவர்கள் தமது பெரியன்னையான ஹஸ்ரத் கதீஜா அவர்களிடத்தில் ஹஸ்ரத் ஸைது அவர்களை ஒப்படைத்து விட்டார்கள். பிறகு ஹஸ்ரத் கதீஜா அவர்கள் தமது அனைத்து அடிமைகளுடன் ஹஸ்ரத் ஸைது அவர்களையும் பெருமானார் (ஸல்) அவர்களிடம் ஒப்படைத்து விட்டார்கள்.

(அஸீரத்துன் நபவிய்யா லா பின் ஹிஷாம் பக்கம் 188 – 2001 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பின் அடிப்படையில், ஹஸ்ரத் ஸைது அவர்கள் மக்காவிற்குக் கொண்டு வரப்பட்டபோது அவர்களது வயது 8 ஆக இருந்தது.

(சீரத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 165 ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) – கராச்சியிலுள்ள தாருல் இஷா அத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஸைது அவர்கள் தொலைந்து விட்டதால் அன்னாரின் தாயாருக்கு மிகுந்த துக்கம் ஏற்பட்டது. சிறிது காலத்திற்குப் பிறகு பனு கல்பைச் சார்ந்த சிலர் மக்காவிற்கு ஹஜ் செய்ய வந்திருந்தனர். அவர்கள் ஹஸ்ரத் ஸைது அவர்களை அடையாளங்கண்டு கொண்டனர்.

ஹஸ்ரத் ஸைது அவர்கள் அவர்களிடத்தில், எனது தாயாரிடத்தில் சென்று நான் கானா காபாவின் அருகில் பனு மஆஸின் ஒரு கண்ணியமிக்க குடும்பத்தில் வசித்து வருகின்றேன். என்னைப் பற்றி அவர்கள் எந்தக் கவலையும் கொள்ள வேண்டாம். நான் நிம்மதியாக வாழ்ந்து வருகிறேன் என்று கூறி அவர்களை அனுப்பி வைத்தார்கள். பனு கல்பைச் சேர்ந்த இம்மக்கள் திரும்பிச் சென்று ஹஸ்ரத் ஸைது அவர்களின் தந்தைக்கு இதுபற்றிய தகவலைக் கொடுத்தார்கள்.

அதற்கு அன்னாரின் தந்தையார், கஃபாவின் இறைவனின் மீது ஆணையாக! அது எனது மகனா? நீங்கள் எனது மகனையா பார்த்தீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அந்த மக்கள், ஹஸ்ரத் ஸைது அவர்களின் அடையாளத்தையும் அவர்கள் கூறியதையும் எடுத்துக் கூறினார்கள். பிறகு அன்னாரின் தந்தை மற்றும் சிறிய தந்தை மக்காவை நோக்கிப் புறப்பட்டார்கள். மக்காவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். மேலும் ஈட்டுத் தொகையை பெற்றுக் கொண்டு தமது மகனான ஹஸ்ரத் ஸைது அவர்களை விடுவிக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் ஸைது அவர்களை அழைத்து அவர்களது கருத்தைக் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் ஸைது அவர்கள், தமது தந்தை மற்றும் சிறிய தந்தையாருடன் செல்ல மறுத்து விட்டார்கள்.

(சீரத்துஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 165–168 ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) – கராச்சியிலுள்ள தாருல் இஷா அத்தில் அச்சிடப்பட்டது)

இந்த சம்பவத்தைப் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் விளக்கமாக எடுத்துரைக்கின்றார்கள். அன்னார் கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் திருமணம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் நடைபெற்றது. திருமணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள், நான் செல்வந்தராக இருக்கின்றேன்; எனது கணவரோ ஏழையாக இருக்கின்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஏதாவது தேவைப்பட்டால் அதனை என்னிடம் கேட்க நேரிடும் என்று உணர்ந்தார்கள். ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் மிகவும் புத்திசாலி பெண்மணியாக இருந்தார்கள். வாழ்க்கையை எவ்வாறு கழிக்க வேண்டும் என்பதை நன்கு அறிந்திருந்தார்கள். நன்கு புரியும் திறன் கொண்ட பெண்மணியாகவும் இருந்தார்கள்.

எனவே நான் எனது அனைத்து செல்வத்தையும் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் ஒப்படைத்து விட்டால் இந்த செல்வம் என் மனைவியுடையது என்ற எந்த எண்ணமும் அன்னாருக்கு ஏற்படாது. மேலும் அன்னார் எவ்வாறு விரும்புவார்களோ அவ்வாறே அன்னார் அதனை செலவு செய்து கொள்வார்கள் என்று எண்ணினார்கள். எனவே திருமணம் முடிந்து சில நாட்கள் கழிந்தன. பிறகு ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில், எனக்கு ஓர் ஆலோசனை உள்ளது. நான் அதனை உங்களிடத்தில் கூற விரும்புகின்றேன். தாங்கள் எனக்கு அனுமதி தந்தால் நான் அதனை உங்களிடத்தில் கூறுவேன் என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அது என்ன ஆலோசனை? என்று வினவினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள், நான் எனது அனைத்து செல்வத்தையும், எனது அனைத்து அடிமைகளையும் உங்களிடம் ஒப்படைத்து விடலாம் என்று நான் தீர்மானித்து விட்டேன். மேலும் இவை அனைத்தும் இனி உங்களது செல்வமாகும் என்று கூறினார்கள். மேலும் நீங்கள் இதனை ஏற்றுக் கொண்டால் நான் மிக்க மகிழ்ச்சியடைவேன். மேலும் இது எனது நற்பாக்கியமாக அமையும் என்றும் கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த ஆலோசனையை செவிமடுத்ததும் கூறினார்கள்: கதீஜாவே! நீங்கள் நன்றாக சிந்தித்துதான் இந்த முடிவை எடுத்திருக்கின்றீர்களா? நீங்கள் உங்களது அனைத்து செல்வத்தையும் என்னிடம் ஒப்படைத்து விட்டால் பிறகு அவை அனைத்தும் என்னுடைய செல்வமாகி விடும். உங்களுடைய செல்வமாக இருக்காது என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள், நான் நன்கு சிந்தித்து தான் இந்த முடிவை எடுத்துள்ளேன். நான் நன்கு புரிந்து தான் இந்த முடிவை செய்துள்ளேன். வாழ்க்கையைக் கழிப்பதற்கு இது மிகவும் சிறந்த வழிமுறை என்பதை அறிந்து இந்த முடிவை எடுத்துள்ளேன் என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், அப்படியென்றால் நன்கு சிந்தித்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள், நான் நன்கு சிந்தித்துதான் இந்த முடிவை எடுத்துள்ளேன் என்று கூறினார்கள்.

அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நீங்கள் நன்கு சிந்தித்துதான் உங்களது இந்த அனைத்து செல்வங்களையும், உங்களது அனைத்து அடிமைகளையும் என்னிடம் ஒப்படைத்துள்ளீர்கள் என்றால் பிறகு என்னைப் போன்ற ஒரு மனிதனை எனது அடிமை என அழைக்க நான் விரும்பவில்லை. நான் அனைத்து அடிமைகளையும் விடுதலையாக்கி விடுகின்றேன் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள், இவர்கள் அனைவரும் உங்கள் சொத்துக்கள் ஆவார்கள். நீங்கள் எவ்வாறு விரும்புகின்றீர்களோ அவ்வாறே செய்து கொள்ளலாம் என்று கூறினார்கள். இதைக் கேட்டதும் பெருமானார் (ஸல்) அவர்கள் எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தார்கள். மேலும் வீட்டை விட்டு வெளியேறி கஃபாவிற்குச் சென்று, கதீஜா (ரலி) அவர்கள் அவர்களது அனைத்து செல்வங்களையும், அவர்களது அனைத்து அடிமைகளையும் எனக்குக் கொடுத்து விட்டார்கள். மேலும் நான் இப்போது இந்த அனைத்து அடிமைகளையும் விடுதலை செய்கின்றேன் என்று அறிவிப்புச் செய்தார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: இன்றைய காலத்தில் ஒருவருக்கு செல்வம் கிடைத்து விட்டால் நான் மோட்டார் சைக்கிள் வாங்குவேன்; அல்லது வீடு கட்டுவேன். அல்லது ஐரோப்பாவிற்கு சுற்றுப் பயணம் செய்வேன் என்றெல்லாம் கூறுவார்.

இன்றைய நாட்களில் நாம் இப்படிப்பட்ட பல விவகாரங்களைப் பார்க்கின்றோம். அத்தகைய பல விவகாரங்கள் நம்மிடம் வருகின்றன.

மனைவி தனது செல்வத்தை தனது கணவரிடம் ஒப்படைத்து விட்டால் பின்னர் அந்த கணவர் அந்த செல்வங்களை தமது விருப்பத்திற்கேற்ப நிறைவேற்றுவது மட்டுமல்லாமல் மனைவியின் உரிமைகளை வழங்குவதற்கும் அவர் மறுத்து விடுகின்றார். இந்நிலையில் மனைவிமார்கள் மிகவும் நிர்பந்தத்திற்கு ஆளாகின்றார்கள். பிறகு சொத்து தம்வசம் வந்த உடன் அத்தகைய கணவன்மார்கள் மனைவியை தமது அடிமையாகவே கருதுகின்றனர். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களின் சிந்தனை எப்படிப்பட்டதாக இருந்தது? அன்னாரின் அந்தஸ்து எப்படிப்பட்டதாக இருந்தது? என்பதைப் பாருங்கள்.

அன்னார் அந்த செல்வத்தை மார்க்கத்திற்காக செலவு செய்ய வேண்டும் என்று விரும்பினார்கள். அல்லாஹ்வின் வழியில் அந்த செல்வத்தை செலவிட வேண்டும் என்று விரும்பினார்கள். மேலும் மனிதர்களை அடிமையாக்குகின்ற அந்த பழக்கத்திற்கு அன்னார் முடிவு கட்ட விரும்பினார்கள். எவ்வாறிருப்பினும் அன்னார் (ஸல்) அவர்களிடம் இந்த ஆசை இருந்தது. அதாவது என்னைப் போன்ற இறைவனது அடியார்கள், மேலும் என்னைப் போன்ற மனிதர்கள் அடிமைகள் என்று ஏன் அழைக்கப்பட வேண்டும். அவர்கள் ஏன் அடிமையாக இருக்க வேண்டும் என்று அன்னார் ஆசைப்பட்டார்கள்.

முழு உலகிலும் இந்த விஷயம் விநோதமான ஒன்றாக இருந்தது. ஆனால் இந்த விநோதமான காரியத்தை பெருமானார் (ஸல்) அவர்கள் அறிவித்தார்கள். இவ்வாறு அன்னாரிடம் செல்வம் வந்த பிறகு அசாதாரணமான முறையில் அன்னார் அதனை வாரி வழங்கினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள், எனது அனைத்து அடிமைகளும் இப்போது விடுவிக்கப்பட்டார்கள் என்று அறிவிப்புச் செய்தார்கள். அப்போது ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா அவர்களைத் தவிர மற்ற அனைத்து அடிமைகளும் சென்று விட்டார்கள். ஹஸ்ரத் ஸைது அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடனேயே இருந்தார்கள்.

அவர்கள் கூறினார்கள்: நீங்கள் என்னை விடுதலை செய்து விட்டீர்கள். ஆனால் நான் விடுதலையாக விரும்பவில்லை. நான் உங்களுடனேயே தங்கியிருக்க விரும்புகின்றேன். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், நீங்கள் உங்களது நாட்டிற்குச் செல்லுங்கள். இப்போது நீங்கள் விடுதலையாகி விட்டீர்கள். எனவே நீங்கள் உங்கள் உறவினர்களைச் சென்று சந்தியுங்கள் என்று கூறினார்கள்.

ஆனால் ஹஸ்ரத் ஸைது அவர்கள் கூறினார்கள்: நான் உங்களது அன்பு மற்றும் கலப்பற்ற தன்மையின் காரணமாக எனக்கு நீங்கள் மற்ற எல்லாரையும் விட அதிக அன்பிற்குரியவராக ஆகிவிட்டீர்கள். எனவே என்னால் உங்களை விட்டு விட்டுச் செல்ல முடியாது.

ஹஸ்ரத் ஸைது அவர்கள் பணக்கார குடும்பத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். ஆனால் சிறிய வயதில் அன்னாரை கொள்ளையர்கள் கடத்திக் கொண்டு வந்தார்கள். மேலும் அவர்கள் சந்தையில் விற்று விட்டார்கள். பின்னர் அவர்கள் இங்கும் அங்கும் சுற்றித் திரிந்து ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களிடத்தில் வந்து சேர்ந்தார்கள். மேலும் அன்னாருடைய தந்தையும் சிறிய தந்தையும் மிகவும் கவலை கொண்டார்கள். அன்னாரைத் தேடி வீட்டை விட்டு வெளியேறினார்கள். ஹஸ்ரத் ஸைது அவர்கள் ரோமில் இருப்பதாக அவர்களுக்குத் தகவல் வந்தது. எனவே அவர்கள் ரோமிற்குச் சென்றார்கள். பின்னர் அவர்கள் அரபு நாட்டில் இருப்பதாக தகவல் வந்தது. எனவே அவர்கள் அரபு நாட்டிற்கு வந்தார்கள். பின்னர் மக்காவில் இருப்பதாக அவர்களுக்கு தெரிய வந்தது. எனவே அவர்கள் மக்கா வந்தார்கள். மக்கா வந்ததும் ஹஸ்ரத் ஸைது அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் இருப்பதாக அவர்களுக்குத் தெரிய வந்தது. எனவே அவர்கள் இருவரும் அன்னாரிடம் வந்தார்கள்.

மேலும் பெருமானார் (ஸல்) அவர்களிடம், நாங்கள் உங்களது கண்ணியம் மற்றும் வள்ளல் தன்மை ஆகியவற்றை செவியுற்று இங்கு வருகை தந்துள்ளோம். எங்களது மகன் உங்களிடத்தில் அடிமையாக இருக்கின்றான். நீங்கள் விரும்புகின்ற தொகையை எங்களிடமிருந்து பெற்றுக் கொண்டு நீங்கள் அவரை விடுதலை செய்து விடுங்கள். நீங்கள் கேட்கின்ற தொகையை நாங்கள் தர தயாராக இருக்கின்றோம். அவரது தாயார் அவரது பிரிவின் காரணமாக மிகுந்த துக்கத்திற்கு ஆளாகி இருக்கின்றார். அவர் அழுதழுது அவரது கண்கள் குருடாகி விட்டன. நீங்கள் கேட்கின்ற தொகையை நாங்கள் வழங்கி விடுகின்றோம். நீங்கள் அவர்களை விடுதலை செய்து விட்டால் அது மிகப்பெரிய கருணையாக இருக்கும் என்று கூறினார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், உங்களது மகன் எனது அடிமையாக இல்லை. நான் அவரை எப்போதோ விடுதலை செய்து விட்டேன் என்று கூறினார்கள்.

இதற்குப் பிறகு அன்னார் ஹஸ்ரத் ஸைது அவர்களை அழைத்து, உங்களது தந்தையாரும், உங்களது சிறிய தந்தையாரும் உங்களை அழைத்துச் செல்ல வந்துள்ளார்கள். உங்களது தாயார் முதியவராக இருக்கின்றார். மேலும் உங்களது பிரிவின் காரணமாக அவர்களது கண்கள் அழுதழுது குருடாகி விட்டன. நான் உங்களை விடுதலை செய்திருக்கின்றேன். நீங்கள் இப்போது எனது அடிமையல்ல. எனவே நீங்கள் இவர்களுடன் செல்லாம் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் ஸைது அவர்கள், நீங்கள் என்னை விடுதலை செய்து விட்டீர்கள். ஆனால் நான் விடுதலையாக விரும்பவில்லை. நான் உங்களது அடிமையாகவே இருக்க விரும்புகின்றேன் என்று கூறினார்கள்.

அதற்கு பெருமனார் (ஸல்) அவர்கள், உங்களது தாயாருக்கு மிகுந்த துன்பம் ஏற்பட்டிருக்கின்றது. மேலும் உங்களது தந்தை மற்றும் சிறிய தந்தை உங்களை அழைத்துச் செல்ல மிகத் தொலைவிலிருந்து வந்துள்ளார்கள். துன்பங்களை சகித்து வந்துள்ளார்கள். எனவே நீங்கள் இவர்களுடன் சென்று விடுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஸைது அவர்களின் தந்தை மற்றும் சிறிய தந்தை ஆகிய இருவரும் அன்னாருக்குப் புரிய வைத்தார்கள். ஆனால் ஹஸ்ரத் ஸைது அவர்கள் அவர்களுடன் செல்ல மறுத்து விட்டார்கள்.

ஹஸ்ரத் ஸைது அவர்கள் கூறினார்கள்: நீங்கள் என் தந்தையும், சிறிய தந்தையும் ஆவீர்கள். ஆயினும் உங்கள் மீது எனக்கு அன்பு இருக்கின்றது. ஆனால் எனக்கு பெருமானார் (ஸல்) அவர்களுடன் ஏற்பட்டுள்ள உறவு எப்படிப்பட்ட உறவு என்றால் அதனை என்னால் ஒருபோதும் முறித்துக் கொள்ள முடியாது. எனது தாயார் மிகுந்த துக்கத்தில் இருக்கின்றார் என்பதை அறிந்து எனக்கு மிகுந்த துக்கம் ஏற்படுகின்றது. ஆனால் நான் பெருமானார் (ஸல்) அவர்களைப் பிரிந்து விட்டால் என்னால் உயிர் வாழ முடியாது. தாயின் துக்கம் என்பது ஒரு பக்கம். ஆனால் அதை விட பெரியது எனது துக்கமாகும்.

ஹஸ்ரத் ஸைது அவர்களின் இந்தக் கூற்றை கேட்டு விட்டு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கானா கஃபாவிற்குச் சென்றார்கள். மேலும் கூறினார்கள்: ஸைது அவர்கள் தனது அன்பிற்கான சான்றை வெளிப்படுத்தியுள்ளார். எனவே இன்றிலிருந்து அவர் எனது மகனாவார். அன்னாரது கூற்றைக் கேட்ட ஹஸ்ரத் ஸைது அவர்களின் தந்தையும், சிறிய தந்தையும் மிகவும் மகிழ்ச்சியடைந்தவாறு திரும்பிச் சென்றார்கள். ஏனென்றால் அவர்கள் ஹஸ்ரத் ஸைது அவர்கள் இங்கு மகிழ்ச்சியாகவும், நிம்மதியாகவும் வாழ்ந்து வருவதை கண்டு கொண்டார்கள்.

சுருக்கமாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்ந்த நல்லொழுக்கத்திற்கான சான்று இவ்வாறு அமைந்தது. ஹஸ்ரத் ஸைது அவர்கள் நன்றியுணர்வுமிக்க தொடர்பை வெளிப்படுத்திய போது ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்கள் அன்னார் மீது அசாதாரணமான கருணையை வெளிப்படுத்தினார்கள்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 10 பக்கம் 334,335)

இந்த சம்பவத்தைப் பற்றி சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற புத்தகத்திலும் வருகிறது. அதாவது அன்னாருடைய தந்தையார் மற்றும்

சிறிய தந்தையார் அன்னாரை அழைத்துச் செல்ல வந்தார்கள். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைது அவர்களிடம், நான் மிக மகிழ்ச்சியுடன் உங்களுக்கு அனுமதி தருகின்றேன். நீங்கள் உங்களது தந்தையுடன் சென்று விடுங்கள் என்று கூறினார்கள்.

ஆனால் ஹஸ்ரத் ஸைது அவர்கள், என்னால் உங்களை விட்டு விட்டு ஒருபோதும் செல்ல முடியாது. என்னைப் பொறுத்தவரை நீங்கள் என் தந்தை மற்றும் சிறிய தந்தையை விட மிகவும் நேசத்திற்குரியவர் ஆவீர்கள் என்று கூறினார்கள். அப்போது அன்னாரது சிறிய தந்தை இவ்வாறு கூறினார்: நாங்களோ உன்னை அடிமைத்துவத்திலிருந்து விடுதலை செய்ய வந்துள்ளோம். ஆனால் நீயோ அடிமையாக இருப்பதையே விரும்புகின்றாயா?

அப்போது ஹஸ்ரத் ஸைது அவர்கள், நான் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் எப்படிப்பட்ட சிறப்பம்சங்களைக் கண்டுள்ளேன் என்றால், நான் அவர்களுக்கே எல்லா விஷயங்களையும் விட முன்னுரிமை வழங்குவேன் என்று கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைது அவர்களின் இந்த பதிலைக் கேட்டு விட்டு உடனடியாக காபா கஃபாவிற்குச் சென்றார்கள். மேலும் உரத்த குரலில் கூறினார்கள்: மக்களே! நீங்கள் சாட்சியாக இருங்கள். இன்று முதல் நான் ஸைதை விடுதலை செய்கின்றேன். அவரை நான் எனது மகனாக ஆக்கிக் கொள்கின்றேன். நீங்கள் அதற்குச் சாட்சியாக இருங்கள். ஒருவகையில் பெருமானார் (ஸல்) அவர்கள் ஏற்கனவே அன்னாரை விடுதலை செய்திருந்தார்கள். இருப்பினும் மீண்டும் ஒரு முறை மக்களுக்கு முன்னால் இந்த அறிவிப்பைச் செய்தார்கள். மேலும், இவர் எனது வாரிசாவார்; நான் அவருக்கு வாரிசாக இருக்கின்றேன் என்றும் கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த அறிவிப்பைச் செய்த நாள் முதல் ஹஸ்ரத் ஸைது அவர்கள், ஸைது பின் ஹாரிஸா என்பதற்கு பதிலாக ஸைது பின் முஹம்மது என்று அழைக்கப்பட்டார்கள். ஆயினும் ஹிஜ்ரத்திற்குப் பிறகு அல்லாஹ்விடமிருந்து வளர்ப்பு மகனாக ஆக்கிக் கொள்வது ஆகுமானதல்ல என்ற இந்த கட்டளை இறங்கியது. அதன் பிறகு ஸைது அவர்கள் ஸைது பின் ஹாரிஸா என்று அழைக்கப்பட்டார்கள். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களின் நன்றியுணர்வுமிக்க சேவகர் மிகவும் விசுவாசமிக்கவராக இருந்தார். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் முன்பை விட அதிக அன்பை அன்னாரிடம் கொண்டிருந்தார்கள். அந்த அன்பில் முன்னேற்றம் ஏற்பட்டது. ஹஸ்ரத் ஸைது அவர்களின் மரணத்திற்குப் பிறகும் அன்னாருடைய மகனான ஹஸ்ரத் உஸாமா பின் ஸைதையும் அவர்கள் அன்னார் மிகவும் நேசித்தார்கள். உஸாமா அவர்கள் அன்னாரின் அடிமைப் பெண்ணாகிய உம்மே அய்மன் என்ற பெண்ணின் வயிற்றில் பிறந்தார்கள். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைது அவர்களின் மகனிடனும் மிகவும் அன்புடன் நடந்து கொண்டார்கள். ஸைது அவர்களின் சிறப்புகளில் மிக முக்கிய சிறப்பு என்னவென்றால், மற்ற அனைத்து சஹாபாக்களை விடவும் அன்னாரது பெயர் மட்டுமே திருக்குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 110,111)

அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ஸைது அவர்களின் மூத்த சகோதரர் ஹஸ்ரத் ஜப்லா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் சென்று எனது சகோதரரை என்னுடன் அனுப்பி வையுங்கள் என்று நான் வேண்டினேன். (இந்த சம்பவம் ஏற்கெனவே நடந்த சம்பவத்திற்குப் பிறகு நடந்த சம்பவம் என்று தெரிய வருகிறது).

அதற்கு நபி (ஸல்) அவர்கள், உங்கள் சகோதரர் உங்களுக்கு முன்னாலேயே இருக்கின்றார். அவர் விரும்பினால் அவர் உங்களுடன் செல்லலாம். நான் அவரை ஒருபோதும் தடுக்க மாட்டேன் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் ஸைது அவர்கள், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் உங்களை விட வேறு எவருக்கும் முக்கியத்துவம் வழங்க மாட்டேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஜப்லா அவர்கள் கூறுகின்றார்கள்: நான் எனது கருத்தை விட எனது சகோதரனின் கருத்தே சிறந்தது என்பதை உணர்ந்து கொண்டேன்.

(கன்ஸுல் உம்மால் தொகுதி 13 பக்கம் 397, பாப் ஃபஸாயிலுஸ் சஹாபா.... ஹதீஸ் எண் 37065 – 1985 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது)

அன்னாருடைய சகோதரர் தொடர்பாக இவ்வாறும் ஓர் அறிவிப்பு கிடைக்கிறது. ஹஸ்ரத் ஜப்லா அவர்கள் வயதால் ஹஸ்ரத் ஸைது அவர்களை விட மூத்தவராக இருந்தார்கள். ஒருமுறை அவர்களிடம், உங்கள் இருவரில் யார் மூத்தவர்? என்று கேட்கப்பட்டது. நீங்கள் பெரியவரா? அல்லது ஸைது பெரியவரா? என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், ஸைதே என்னை விட பெரியவர். ஆனால் வயதால் நான் அவரை விட மூத்தவன் ஆவேன் என்று கூறினார்கள். அதாவது ஹஸ்ரத் ஸைது அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதில் என்னை விட முந்தி விட்டார்கள் என்பது அதன் பொருளாகும்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களிடமிருந்து இந்த அறிவிப்பு வருகின்றது. நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட ஹஸ்ரத் ஸைது அவர்களை ஸைது பின் முஹம்மது என்றே அழைத்து வந்தோம். எந்த அளவுக்கு என்றால் இது தொடர்பாக திருக்குர்ஆன் வசனமும் இறங்கியது.

اُدْعُوْهُمْ لِاٰبَآئِهِمْ هُوَ اَقْسَطُ عِنْدَ اللّٰهِ அதாவது நீங்கள் பிள்ளைகளை அவர்களின் தந்தையின் பெயர் கொண்டு அழையுங்கள் என்ற வசனம் இறங்கயிது. இது அல்லாஹ்வின் பார்வையில் மிகவும் நீதிக்குரிய விஷயம் என்று கூறப்பட்டது.

(சஹீஹ் புகாரி, கிதாபுத் தஃப்ஸீர் ஹதீஸ் எண் 4782)

ஹஸ்ரத் பரா அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: اُدْعُوْهُمْ لِاٰبَآئِهِمْ நீர் எமது சகோதரரும், எமது நண்பரும் ஆவீர்.

(சஹீஹுல் புகாரி தொகுதி 7 பக்கம் 497 – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இன்னொரு அறிவிப்பில் இந்த சொற்களில் நமக்கு காணக் கிடைக்கின்றது: يَا زَيْدُ اَنْتَ مَوْلَايَ وَمِنِّيْ وَاِلَيَّ وَاَحَبُّ النَّاسِ اِلَيَّ அதாவது ஸைது அவர்களே! நீர் எனது நண்பரும் ஆவீர். எனது சகோதரும் ஆவீர். மக்களில் அனைவரையும் விட நீர் எனது நேசத்திற்குரியவர் ஆவீர்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 497 – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் இப்னு உமர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் அவர்களின் காலத்தில் ஹஸ்ரத் உஸாமா அவர்களுக்கு என்னை விட அதிக வஸீஃபா தொகை நிர்ணயிக்கப்பட்டது. அன்னார் ஹஸ்ரத் உமர் அவர்களின் மகனாக அன்னார் இருந்தார்கள்.

ஹஸ்ரத் இப்னு உமர் அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உஸாமா அவர்கள் ஹஸ்ரத் ஸைது அவர்களின் மகனாக இருந்தார்கள். அவர்களுக்கு வஸீஃபா தொகை நிர்ணயிக்கப்பட்ட போது அது எனக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகையை விட அதிகமாக இருந்தது. எனவே நான் என்னை விட அதிக தொகை அவர்களுக்கு ஏன் நிர்ணயிக்கப்பட்டது? என்று அவர்களிடம் கேட்டேன்.

அதற்கு அன்னார் இவ்வாறு பதில் கூறினார்கள்: அதாவது ஹஸ்ரத் உஸாமா உம்மை விட பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அதிக அன்பிற்குரியவராக இருந்தார்.

உஸாமா அவர்கள் ஹஸ்ரத் ஸைது அவர்களின் மகனாவார்கள். உமது தந்தையை விட பெருமானார் (ஸல்) அவர்கள் உஸாமாவின் தந்தையாரை மிகவும் நேசித்தார்கள்.

அதாவது, என்னை விட ஹஸ்ரத் ஸைது அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் மிகவும் அதிகமாக நேசித்தார்கள் என்று ஹஸ்ரத் உமர் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

(அல் அஸாபா ஃபீ தமீஸுஸ் சஹாபா தொகுதி 2 பக்கம் 497 ஸைது பின் ஹாரிஸா – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அலி அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் ஸைது அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களால் விடுவிக்கப்பட்ட அடிமையாக இருந்தார்கள். ஆண்களில் எல்லோரையும் விட முதலில் ஈமான் கொண்டார்கள். தொழுகையையும் நிறைவேற்றி வந்தார்கள்.

(கன்ஸுல் உம்மால் தொகுதி 13 பக்கம் 397, பாப் ஃபஸாயிலுஸ் சஹாபா ஸைது பின் ஹாரிஸா ஹதீஸ் எண் 37063 – 1985 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது)

இந்த விஷயத்தை எடுத்துக் கூறியவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

அனைத்து தரப்பைச் சார்ந்தவர்களும் அல்லாஹ் அன்னாருக்கு வழங்கியிருந்தான். உஸ்மான், தல்ஹா மற்றும் சுபைர் போன்ற மக்காவின் உயர் தரமான குடும்பத்தைச் சார்ந்தவர்களையும் அல்லாஹ் அன்னாருக்கு வழங்கியிருந்தான். அதன் மூலம் சாதாரண குடும்பத்தைச் சார்ந்தவர்கள் தான் உங்களுடன் இருக்கின்றார்கள். உயர் அந்தஸ்தை கொண்ட குடும்பத்தைச் சார்ந்த எவரும் உங்களுடன் இல்லை என்று எவராவது ஆட்சேபணை செய்தால் ஹஸ்ரத் உஸ்மான், தல்ஹா மற்றும் சுபைர் போன்றோர் நாங்கள் உயர் குடும்பத்தைச் சார்ந்தவர்களாக இருக்கின்றோம் என்று அவர்களால் பதில் கூற முடியும். மேலும் உங்களிடத்தில் செல்வந்தர்களே இருக்கின்றனர். ஏழைகள் இல்லை என்று எவராவது ஆட்சேபனை செய்தால் பிறகு பிலால் மற்றும் ஸைது ஆகியோர் இதற்கு பதிலளிப்பதற்குத் தயாராக இருந்தனர்.

மேலும் சிலர் கூறினார்கள்: இது இளைஞர்களின் விளையாட்டாகும். இளைஞர்கள் மட்டுமே உங்களைச் சுற்றி இருக்கலாம். இத்தகைய கூற்றை கூறக்கூடியவர்களுக்கு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் பதிலளிப்பதற்கு போதுமானவராக இருந்தார்கள். ஏனென்றால் அன்னார் இளைஞராகவும் இருக்கவில்லை; அனுபவமற்றவராகவும் இருக்கவில்லை. ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களை அன்னார் ஏற்றுக் கொண்டிருந்தார்கள்.

சுருக்கமாக, எல்லா வகையிலும் எதிரிகளுக்கு பதிலளிப்பதற்காக அன்னாருக்கு ஆதாரங்கள் இருந்தன. அன்னாரது தோழர்கள் எப்போதும் உயிருள்ள சான்றாகத் திகழ்ந்தார்கள். இது அல்லாஹ்வால் வழங்கப்பட்ட மாபெரும் அருளாகும். அந்த அருள் எப்போதும் பெருமானார் (ஸல்) அவர்களுடன் இருந்து வந்தது.

இதைக் குறிப்பிட்டவாறு அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்: وَوَضَعۡنَا عَنۡكَ وِزۡرَكَ الَّذِیۡۤ اَنۡقَضَ ظَہۡرَکَ- முஹம்மதே (ஸல்)! உலகத்தின் பார்வை இதன் பக்கம் செல்லவில்லையா? உலகம் எந்த விஷயங்களினால் வெற்றி கொள்ளப்படுகிறதோ அவை அனைத்தும் உமக்கு வழங்கப்படுகின்றன. உலகம் தியாகம் செய்யக்கூடிய இளைஞர்களால் வெற்றி கொள்ளப்படுகின்றதென்றால் உமக்கும் அந்த இளைஞர்கள் வழங்கப்பட்டுள்ளனர். உலகம் அனுபவம் வாய்ந்த மக்களால் தோற்கடிக்கப்படுகின்றதென்றால், அப்படிப்பட்ட மக்களும் உமக்கு வழங்கப்பட்டுள்ளனர். மிகுந்த பக்குவடைந்த மக்களும் உம்முடன் இருக்கின்றனர். உலகம் செல்வம் படைத்த மற்றும் ஆதிக்கம் நிறைந்த மக்களால் வெற்றி கொள்ளப்படுகின்றதென்றால், அப்படிப்பட்ட மக்களும் உமக்கு வழங்கப்பட்டுள்ளனர். பொது மக்களின் தியாகம் மற்றும் அர்ப்பணிப்பால் உலகம் வெற்றி கொள்ளப்படுகின்றதென்றால், இந்த அனைத்து தொண்டர்களும் உமக்குப் பின்னால் சுற்றித் திரிகின்றனர். இவ்வாறிருக்க நீர் தோற்று விடுவதும், உமக்கு எதிரில் மக்காவாசிகள் வெற்றி பெற்று விடுவர் என்பதும் எவ்வாறு சாத்தியமாகும்?

எனவே وَوَضَعۡنَا عَنۡكَ وِزۡرَكَ الَّذِیۡۤ اَنۡقَضَ ظَہۡرَکَ- என்பதன் பொருள் என்னவென்றால், எந்த சுமை உமது இடுப்பை முறித்துக் கொண்டிருந்ததோ அந்த சுமையை நாமே சுமந்து கொண்டோம். இந்தப் பணிகளைப் பார்த்து இதனை நான் எவ்வாறு செய்வேன் என்று உமது பார்வை சென்றது. இறைவன் ஒரே நாளில் ஐந்து தூணை வழங்கி விட்டான். அபூபக்ர் என்ற தூணை இஸ்லாத்தின் மேற்கூரையை எழுப்புவதற்காக எழுப்பினான். கதீஜா என்ற தூணை இஸ்லாத்தின் மேற் கூரையை நிலைநாட்டுவதற்காக அருளினான். அலி என்ற தூணை இஸ்லாத்தின் மேற் கூரையை நிலைநாட்டுவதற்காக அருளினான். ஸைது என்ற தூணை இஸ்லாத்தின் மேற் கூரையை நிலைநாட்டுவதற்காக அருளினான். மேலும் வர்கா என்ற தூணை இஸ்லாத்தின் மேற் கூரையை நிலைநாட்டுவதற்காக அருளினான். இவ்வாறு தனியாக நீர் சுமந்த சுமையை இந்த மக்கள் சேர்ந்து சுமந்தனர்.

(தஃப்ஸீர் கபீர் தொகுதி 9 பக்கம் 140)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள். நான்கு நபர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுடன் மிக நெருங்கிய தொடர்பை வைத்திருப்பதற்கான நற்பேற்றை பெற்றிருந்தார்கள். அவர்கள் நபி (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்டார்கள். அதாவது ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் அன்னாரது மனைவியாவார்கள். ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அன்னாரது சிறிய தந்தைவழி சகோதரர் ஆவார்கள். ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் அன்னாரால் விடுதலை செய்யப்பட்ட அடிமையாக இருந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அன்னாரது நண்பராக இருந்தார்கள். இவர்கள் அனைவரும் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டார்கள். இந்த நம்பிக்கைக்கான ஆதாரம் பெருமானார் (ஸல்) அவர்கள் ஒருபோதும் பொய் பேச மாட்டார்கள் என்பதன் அடிப்படையில் இருந்தது. இவர்கள் அனைவரும் பெருமானார் (ஸல்) அவர்களது நெருக்கத்தைப் பெற்றிருந்தார்கள்.

(தோரா யூரப், அன்வாருல் உலூம் தொகுதி 8 பக்கம் 543)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் ஸைது அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்ட சம்பவம் தொடர்பாக இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது வருகையின் நோக்கம் குறித்து தப்லீக் செய்யத் துவங்கினார்கள். அப்போது எல்லாரையும் விட முதலில் ஹஸ்ரத் கதீஜா அவர்கள் அன்னார் மீது ஈமான் கொண்டார்கள். ஒரு நொடிப்பொழுது கூட அன்னார் ஈமான் கொள்வதிலிருந்து தாமதிக்கவில்லை. அன்னாருக்குப் பிறகு ஆண்களில் ஈமான் கொண்டவர்கள் தொடர்பாக வரலாற்று ஆசிரியர்களுக்கிடையே கருத்து வேறுபாடு உள்ளது. சிலர் ஹஸ்ரத் அபூபக்ர் என்றும் சிலர் ஹஸ்ரத் அலி என்றும் கூறுகின்றார்கள். ஹஸ்ரத் அலி அவர்களுக்கு அப்போது 10 வயது தான் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. வேறு சிலரோ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் விடுதலை செய்யப்பட்ட ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா அவர்கள்தான் முதலில் ஈமான் கொண்டதாக குறிப்பிடுகின்றார்கள். ஆனால் எம்மைப் பொருத்தவரை இந்த அனைத்து சண்டைகளும் வீணானவையாகும்.

ஹஸ்ரத் அலி மற்றும் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸ் ஆகியோர் பெருமானார் (ஸல்) அவர்களின் குடும்பத்தைச் சார்ந்வராக இருந்தார்கள்.

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian — பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 11 July 2019 Issue No. 28

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

அன்னாரது பிள்ளைகளைப் போன்று அன்னாருடன் இருந்து வந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறுவதே அவர்களுக்குப் போதுமானதாக இருந்தது. இன்னும் சொல்வதென்றால் வெளிப்படையில் எந்த ஒப்புதல் வாக்குமூலமும் வழங்குவதற்கு அவசியமில்லாமல் இருந்தது. எனவே அவர்களின் பெயரை இங்கே இடையில் கொண்டு வருவதற்கு எந்த அவசியமும் இல்லை. இப்போது எஞ்சியிருப்பது இவர்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மட்டுமே ஆவார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 121)

ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் ஈமானில் அனைவரை விடவும் முன்னிலையில் இருந்தார்கள் என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விஷயமாகும். எனவே இந்த வகையில் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் அனுபவம் வாய்ந்த, பக்குவம் பெற்ற நபராக இருந்தார்கள். அன்னார்தான் ஆண்களில் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்ட முதல் மனிதர் ஆவார்கள். எவ்வாறிருப்பினும் இந்த நான்கு நபர்களில் மூன்று நபர்கள் ஆண்களாக இருந்தார்கள். ஒருவர் பெண்மணியாக இருந்தார்கள். அவர்கள் அனைவரும் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்டார்கள். இவர்களின் அந்தஸ்து மிக உயர்ந்ததாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: தாயிஃப் பயணத்தின்போது ஹஸ்ரத் ஸைது அவர்கள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். தாயிஃப் நகரம் மக்காவிலிருந்து தென் கிழக்குப் பகுதியில் சுமார் 36 மைல் தொலையில் இருந்தது. அது ஒரு மிக பசுமையான பகுதியாகும். அங்கு உயர்தரமான பழங்கள் உற்பத்தியாகி வந்தன. அங்கு சகீஃப் கோத்திரத்து மக்கள் வசித்து வந்தனர்.

(மஜ்மவுல் பல்தான் தொகுதி 3 பக்கம் 241, லுகாதுல் ஹதீஸ் தொகுதி 3 பக்கம் 46 கிதாப் ஃபே)

ஹஸ்ரத் அபூ தாலிப் அவர்களின் மரணத்திற்குப் பிறகு குரைஷிகள் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது மீண்டும் அநீதியிழைக்க ஆரம்பித்து விட்டனர். எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைது அவர்களை அழைத்துக் கொண்டு தாயிஃபிற்குச் சென்றார்கள். இந்த சம்பவம் நபித்துவத்தின் பத்தாவது ஆண்டில் நிகழ்ந்த சம்பவமாகும். ஷவ்வால் மாதத்தின் சில நாட்கள் எஞ்சியிருந்தன. 10 நாட்கள் வரை பெருமானார் (ஸல்) அவர்கள் தாயிஃபில் தங்கியிருந்தார்கள். அந்நாட்களில் தாயிஃப் நகரத்தின் அனைத்து தலைவர்களிடத்திலும் சென்றார்கள். ஆனால் அவர்களில் எவரும் அன்னாரது அழைப்பை ஒப்புக் கொள்ளவில்லை. மேலும் தமது கோத்திரத்தின் இளைஞர்கள் அன்னாரது அழைப்பை ஏற்றுக் கொண்டு விடுவார்களோ என்ற ஐயம் அவர்களுக்கு இருந்தது. மேலும் தமது கோத்திரத்தின் மக்களும், இளைஞர்களும் இஸ்லாத்தின் அழைப்பை ஏற்றுக் கொண்டு விடக்கூடாதே என்று அவர்கள் கவலை கொண்டார்கள்.

எனவே அவர்கள் உடனே அன்னாரை அழைத்து, முஹம்மதே! நீங்கள் உடனே எங்கள் நகரத்தை விட்டு வெளியேறி விடுங்கள். உங்களது அழைப்பு எங்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதோ அங்கு சென்று தங்குங்கள் என்று கூறினார்கள். மேலும் அன்னாருக்குப் பின்னால் குண்டர்களையும் ஏவி விட்டார்கள். மேலும் பொது மக்களை அவர்களுக்கு எதிராக தூண்டி விட்டார்கள். எனவே அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை கற்களால் எறிந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் பெருமானார் (ஸல்) அவர்களின் இரு பாதங்களும் இரத்தத்தால் நனைந்தன. ஹஸ்ரத் ஸைது அவர்கள் அன்னார் மீது வீசப்பட்ட கற்களை தம்மீது வாங்கிக் கொள்ள முயற்சி செய்து கொண்டிருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் ஹஸ்ரத் ஸைது அவர்களின் தலையில் ஏராளமான காயங்கள் ஏற்பட்டன.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 1 பக்கம் 165 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் ஸைது அவர்களின் குறிப்பு இன்னும் அதிகமாக இருக்கின்றது. இன்ஷா அல்லாஹ் அடுத்த குத்பாவில் அது எடுத்துரைக்கப்படும்.

*நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்*

தினந்தோறும் காலை 9.00 மணியிலிருந்து 11.00 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**தொலைபேசி எண்:**

***1800 425 40000***

இந்த **TOLL FREE** எண்ணில் ∴போன் செய்து அஹ்மதிய்யா ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

உமக்கு ஏதாவது ஒரு பயன் ஏற்பட்டால் அது அவர்களுக்குத் தீயதாகப்படுகின்றது. உமக்கு ஏதாவதொரு துன்பம் ஏற்பட்டால் நம்மை எதிர்நோக்கி வரக்கூடியவைகளை சமாளிப்பதற்கான ஏற்பாட்டினை ஏற்கெனவே நாம் செய்து விட்டோமோ என்று கூறி அவர்கள் மகிழ்ச்சியடைந்தவர்களாய் திரும்பிச் சென்று விடுகின்றனர். (9:50)

A.Shamsul Alam
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்

## திருக்குர்ஆனிலிருந்து...

நீர் (அவர்களிடம்) கூறுவீராக: அல்லாஹ் எங்களுக்கு விதித்திருப்பதுதான் எங்களுக்கு ஏற்படும். அவன் எங்கள் பாதுகாவலனாவான். மேலும் நம்பிக்கையாளர்கள் அல்லாஹ்விடத்திலேயே நம்பிக்கை கொள்ள வேண்டும். (9:51)

Faizal Hameed Ilahi
மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

## திருக்குர்ஆனிலிருந்து...

தங்கள் பாவச் செயல்களை ஏற்றுக் கொண்ட வேறு சிலரும் உள்ளனர். இவர்கள் நல்ல செயல்களை வேறு சில தீய செயல்களுடன் கலந்துவிட்டனர். அல்லாஹ அவர்களுக்கு அருள் செய்து விடலாம். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும், மேன் மேலும் கருணை காட்டுபவனுமாவான். (9:102)

A.Nasir Ahmad
அமீர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், மேலப்பாளையம்

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad